549

KALANILAYAM

549

தனிப்பிரதி விலை அணா 0-2-6.

சுதேசமித்திரன்.

V7: No. 22. 31.5. 1924.

M211, N18
N34.7.22

549

KALANILAYAM

தனிப்பிரதி விலை அணா 0-2-6.

கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

உள் நாடு—வருஷ சந்தா ரூ. 7 0 0
புற நாடு—வருஷ சந்தா ரூ. 9 0 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 7] 1934 ஹு மே மீ 31௳ [No. 22

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 337

2. தமிழ்ப் பாடம்
வில்லிபாரதம்--கிருஷ்ணன் தூதுச் சருக்கம் 339

3. இரவொன்றிற் பல பிழைகள் (அங்கம் 3 களம் 1.)
Goldsmith's—"She stoops to Conquer" 341

4. கம்பராமாயணம்—(துந்திபிப் படலம்)
T. N. சேஷாசலம் B.A.B.L. 343

5. இரவீந்திரநாதர்கட்டுரைகள்-(இயற்கைத்தருமம்)
W.E. அரியநாயகம். B.A; B.D; B.Ed &
ஆஷாதேவி. M.A. 345

6. எதுவேண்டும்—(சிறு கதை)
P. இராமாநுஜன் 347

7. மதுரைக்கோவை (செவிலி கூற்று, மீட்சி)
S. வையாபுரிப்பிள்ளை, B.A. B.L. 349

8. வர்த்தமானம் 351

கலாநிலயம்

சுய கல்சர் 5.

தருமத்திற் கிணங்குமாறுந் தெய்வத்தை வணங்குமாறும் மருமத்துள் மறைந்துநின்று மனிதரையியக்குகின்ற இருபெரும் இயற்கைச்சக்தியிருப்பது யாவர்மாட்டும் சரதமென் றுணர்ந்து தங்கள் புத்தியின் தூய்மையான பயிற்சியா லவைகளை மேன்மேல் பண்பட முதிருமாறு வளரச்செய்தல் சுயகல்சராகு மென்று சென்றநாள் இங்குச் சொன்னோம்; இயம்புதற் கின்னும் வேறோர் இயற்கையும் இருக்கக் காண்பீர். அதுவே, உறவுடன் உவந்து வாழும் உணர்ச்சியின் ஊக்கமாகும்.

பெற்றதால் பிறந்ததால் மணந்ததால் நட்பினால் ஒருவரையொருவர் தமராய்க்கொண்டு உன்னுங்கால் உவகையும், பயிலுங்கால் மகிழ்ச்சியும், உடையவராகின்ற உணர்ச்சியொன்று மனிதர்பால் இயற்கையாயுளது. இவ்வுணர்ச்சி ஒருவருக்கு உண்டாதல்வேண்டுமென்றுகற்பித்தார் இலர். மற்று, இயற்கையாய் அமைந்திராதவிடத்து முயற்சியால் அது முளைப்பதுமில்லை. தாய்முகங் கண்ட மகவும், அம்மகவின் முகங்கண்ட தாயும், தம்மை யறியாமலே நகுகின்றனர்: மார்புறத் தழுவும் அன்னையைச் சழுத்துறக் கட்டிக்கொள்கின்றது குழந்தை. வெளிப்போந்துவந்த தந்தை உடைகளைக் களையாமுன்னம் குறுநடை யாடிவந்து கால்களைக் கட்டிநின்று எந்தாய் என்னை நல்ல நின் கரங்களிலெடுப்பாய்' எனக் கண்களால் இரக்கும் பாலகனை ஏந்தி எடுக்கவும், அப்பாலகன், இப்புழையுள் யாதுளதென நாசியையும், இப்புதரு ளுளதெதுவென மீசையையும் சிறுவிரல்களால் சோதிக்கும்போது இருவருக்கும் எழுகின்ற இன்பத்திற்கு ஏது எதுவென்று எவரால் இயம்புதற்கியலும். அண்ணன் தம்பி அக்காள் தங்கை என்ற அன்பின் உணர்ச்சிக்கு உடன் பிறந்ததல்லால் வேறோர் ஆதாரமில்லை. மனைவிக்குங் கொழுநனுக்கும் உதிக்கின்ற ஒருமாசற்ற ஆசைக்குக் காரணங் கூறலருமை. நெடுநாள் நண்பனிவன் வந்தானென நகைமுகங்காட்டி நல்வரவு கொள்ளல் எதுபற்றி நேர்கின்றது. இவ்வாறே, தனது அயல்மனை வாழ்வோனென்றும், தனது ஊரானென்றும் தன் தேயத்தான் என்றும் பரிவுடன் பாராட்டச் செய்கின்ற உணர்ச்சி எதன்பொருட் டெழுகின்றதென உரைக்கக்கூடும். ஆதலாற்றான், செயற்கையாய் எய்த இயலாததும், இருப்பதற்குக் காரணகாரிய தர்க்க முறைப்படி ஏதுஇதுவென்று எடுத்துக்காட்ட லொண்ணாததுமான இவ்வுணர்ச்சி மானுடராயினோர்க்கெல்லாம் இயற்கை எனக் கூறுகின்றோம்.

இவ்விதம் உறவினரை உவந்துகொள்ளும் அம்சம் முன் சொன்னவைகளைப்போல் யாவர்க்கும் ஓரளவு இயற்கையாயிருக்கின்றதேனும், இதனையும் சுயகல்சரால் தூய்மைசெய்து பெருக்குவது கடனாகின்றது. அவ்வாறு செய்யாது இயற்கையிலது இருக்குமளவு கையாண்டு இகந்துவிடுவோமாயின் பின்னர் விலங்கின் நிலையிலிருந்து நாம் எவ்வளவும் விலகினவராகமாட்டோம். பறவைக்கும் விலங்கிற்கும் மற்றுப் பல்வகை ஜந்துக்களுக்கும் இவ்வியற்கை இருப்பினும், சிறிது நாட்கள் அவை உறவாடிக் கழிவதல்லால், கருதரிய பெரியநிலை யொன்றும் அதனால் அவைபெறுவதில்லை. மக்கள் தொகுதியிலும் கோடிக்கணக்கில் எண்ணிறந்தோரும் அவ்வாறேகழிகின்றனர். பேருக்கே பெற்றவ

ரென்றும்பிள்ளைகளென்றும் மனைவியென்றும் கணவனென்றும் நண்பனென்றும் ஊரான் நாட்டானென்றும் பலர் இருப்பதாக முடிகின்றதேயன்றி முதலில் இவரை இணைத்துவைத்த இயற்கையுணர்ச்சியானது இருந்தவிடந் தெரியாமல் அழிந்துவிடுகின்றது. அழிந்துபோய்ச் சிற்சில 'சவுகரியங்களை'க் கருதியே தாயும் மகனும் கணவனும் மனைவியும் சேர்ந்து ஒருவீட்டில் வசிக்கலாகின்றனர். மிருகங்களினுடைய வாழ்க்கையமைப்பில் இவ்விதச் சவுகரியங்கள் வேண்டியிருப்பதில்லையாகையால் அவைகளுக்குள் உணர்ச்சி அழிவதோடுகூட்டுறவும்அழிந்துதனித்தனி அவை போய்விடுகின்றன. இயற்கையுணர்ச்சியைக் கல்சர்செய்யாத மாந்தருக்கும் மாக்களுக்கும் உள்ள வேறுபாடு இவ்வளவே. மானுடராவது அரிது என்பார். மானுடர் ஆவது ஈசன் செயல். ஆயினும் மானுடராய் முற்றிலும் இருப்பது நம்முடைய செயலேயாதலால் இது அதனினும் அரிதாகின்றது போலும். மானிடராயதற்கு மகிழ்வதனினும் மானிடரா யிருப்பதற்கு முயல்வதே முறை. இப்படி முயல்வதெனின் இயற்கையாயமைந்தஇவ்வுறவினுணர்ச்சியை எத்தகையகல்சரால் பொலிவுபெற நிலைக்கவைத்தவராவோம் என்பதைச் சிறிது பார்ப்போம்.

உறவென்ற பான்மையால் நமதுஉள்ளத்தில் இயற்கையாய் ஊறுகின்ற ஆசையை அவ்வப்போதுஅனுபவிப்பதுடன் கழித்துவிடலாகாது. சுயஆராய்ச்சியால் அதன் இயக்கங்களைப் பன்முறை சோதித்துமெல்ல மெல்ல அதன் உண்மைத் தன்மையினையும், இவ்வாசையைப் பாராட்டுங்கால் எந்தநிலையில் நாம்அமைதி அடைகின்றோம் என்பதையும், அதன் தேய்விற்கும் வளர்ச்சிக்கும் ஆதாரமாயிருப்பவைகளையுந் தெளிந்துகொள்ளல் வேண்டும். இந்தத்தெளிவு பெறப்பெற அவ்வாசை மலரென மணமொடுமலர்ந்து தூய்மையுமடைவதாகும். அடைந்து, கடவுளர்தம் முடியிருந்த கொன்றையும் துளவமும் போல் நீங்காத மணமும் வாடாத தன்மையும் பெறும்.ஏனெனில்,இத்தகைய ஆராய்ச்சியால்,இயற்கையாயிருந்த அவ்வுணர்ச்சியை ஓர் கொள்கையாக மாற்றி அமைத்துக்கொண்டவராவோம். இயற்கை,கொள்கையாக மாறினால்அதுதெய்வத்தன்மைபெறுகின்றது.கொள்கையாகமாற்றிவைக்கவில்லையெனில் இயற்கையுணர்ச்சிகள் சிறிதுபோது இயங்கியபின் ஓய்ந்துவிடும். கொள்கையாயிற்றெனின் அதுவே தூய்மையாலும் அழிவின்றியும்தெய்விகநிலை அடைவது திண்ணம்.இக்கருத்தினை விளக்குவதற்கு ஓர் உதாரணம் உதவலாம்.

ஆணும்பெண்ணும் காமச்சேர்க்கையை விழைவது எல்லாப் பிராணிகளுக்கும் பொதுவானவோர் இயற்கைஉணர்ச்சி.இவ் வியற்கைஉணர்ச்சி இயக்கும்போது ...தனால் எய்தும் சிற்றின்பம் வேட்டுச் சேர்கின்றன. ...சர்கின்ற காலத்தில் அவ்விரண்டும் ஒக்க உண்ணும் ...ன்பத்தால் விளைந்த பற்றுஅவ்வின்பம்முடிந்ததும் ...ற்றுவிடுகின்றது. மனிதர் விவாகம்செய்துகொண்டு மனைவாழ்க்கை அமைத்துக்கொள்வதற்கும் ஆதியில் இந்தச் சேர்க்கைவிழைவே ஆதாரமாயிருந்தது: ஆயினும்,இக் காம இயற்கையை ஆராய்ந்த நம் பண்டைக் காலப்பேரறிஞர்யாதுசெய்தார்? புணர்ச்சிக்காலத்தில் பிறக்கின்ற ஒரு இன்பமும் இணைக்கின்றஅன்பும்அதனோடு முடிவடைவது தகுதியன்றென வோர்ந்தனர். இவ்வியற்கையின் இயக்கத்தால் நேர்ந்தஅன்பும்இன்பமும், புணர்ச்சி யில்லாக்காலத்திலும் நிலைத்திருக்குமாறுசெய்யவேண்டுமெனத்துணிந்தனர். அதற்காகக் குறித்த வொருவன் குறித்தவொருத்தியையே புணர்தல் வேண்டுமென்றும், அவ்வாறு புணர்தற்குரியவர் இன்னவரென்றும், இன்ன சடங்குகள் இவர் புரிதல் வேண்டும் என்றும், அவர்களுள் ஒருவருக்கொருவர் ஆற்றவேண்டியகடமைகள் இன்னவென்றும்,இவையனைய பல விதிகளாலும் முறைகளாலும் இயற்கைப் புணர்ச்சியை 'விவாகம்' என்ற கொள்கையாக மாற்றிவிட்டனர். இப்பொழுதே, முன் இயற்கையாயிருந்தது மணம்பெற லாயிற்று. இயற்கையின் இயக்கத்தினளவுமட்டும் முன் இருந்து பிறகு மறைந்த இன்பமும் அன்பும் இப்பொழுது நிரந்தரமாய் வாடாமல் சோராமல் நிலைத்திருக்கின்றன.காம இயற்கை,'விவாகம்' என்ற கொள்கையாக மாறியவுடன்தெய்வத்தன்மையும்பெற்றுவிட்டது. தெய்வமணம் என அதனை அழைக்கின்றோம், தூயமணம் எனப் பாராட்டுகின்றோம். புணர்ச்சி செய்யுமளவும் பிரிவதில்லை என்ற இயற்கை மாறி, 'ஆயுளுள்ளளவும் பிரியோம்'என்ற கொள்கை இனி அங்கிசான்றாய் ஏற்படுகின்றது.

[காமவேட்கை.மனைவாழ்க்கைக் கொள்கையாகமாறித் தெய்வத்தன்மை அடைகின்ற உண்மைபற்றி இதனைஉதாரணமாய்க் காட்டினோம். மனையாள், கொழுநன்என்றஉறவினால் உண்டாகும் உணர்ச்சியின் இயற்கை வேறு.அதுவும்அதுபோன்ற பிற உறவுகளின் உணர்ச்சிகளும்கொள்கைகளாய் மாறித் தூய்மை யடைவதை இத்தலையங்கம் உரைத்து வருகின்றது]

இவ்வுதாரணம் இடைப்பிறவரல்—உறவெனும்இயற்கையுணர்வை,கொள்கையாக மாறச்செய்வது கல்சரின் கருமம் என்று முன்னர்க்கூறினோம்.கொள்கையாக மாறுங்கால் அது உணர்வுடன் அமையாது அறிவிற்கும் எட்டியதாய், தருமத்திற் கிசைந்ததாய்த் தெய்வத்தன்மை யுடையதாய்ப் பெருகித் தூய நிலையை அடையும்.பல்வகைஉறவுகளுக்கும் இதுஒக்குமாயினும், ஈன்றோருக்கும் மக்களுக்கும் உள்ள உறவின் திறத்தில் இதன் உண்மையைச் சிறிதுஇங்கு ஆழ்ந்து பார்க்கலாம்.

தாயுந் தந்தையும் தம்வயின் பிறந்த மகவின்பால் முதலில் இயற்கையான ஓர் ஆசை உடையவராயிருக்கின்றனர். பெரும்பாலும் இவ்வியற்கையுணர்வு கல்சர் செய்யப்பெறுவதில்லை. ஆதலின் பெரும்பாலும் இவ்வுறவு அவலமாய் முடிகின்றதைக்கண்டு வருந்த வேண்டியவர்களா யிருக்கின்றோம். இந்த இயற்கையின் தன்மையைப் பெற்றோர் ஆய்ந்து அறிவதில்லை. மெய்தீண்டியும் சிறு கைகளால் கூழளாவியும் மழலை மிழற்றியும் இன்பம் செய்கின்ற பருவம் கடந்தபின், ஒருமனையிருந்தாலும், உண்டியும் உடையும் அளிக்கப்பெற்றாலும்,பெற்றோரு மக்களும் பெரும்பாலும் கொதுமலாகவே நிகழ்கின்ற இரகசியம் சற்று உள்ளுறச் சிந்திப்பார்க்குப் புலப்படாமற் போகாது. வெளிப்படையான வெறுப்பும் பகையும்வந்துற்றுழக்கவுங் காண்கின்றோம். இதுதானேனெனில், இயற்கையாயிருந்த உணர்வு வளர்ப்பாரின்றி அழிந்தபின், தங்களுடைய சவுகரியத்திற்காகவே தாய்தந்தையர்கள் இருக்கின்றாரெனும் எண்ணம் மக்களுக்கும்,தங்களுடைய சவுகரியத்திற்கே மக்க ளிருக்கின்றாரெனும் எண்ணம் பெற்றோருக்கும், உண்டாகி அவர்களை யறியாமலே அது உட்புகுந்துகுடிகொள்கின்றது. ஆதலின், இந்தச்

சவுகரியத்திற்கு எவ்வெப்பொழுது விரோதம் நேர்கின்றதென்று அவர்களுக்குத் தோன்றுகிறதோ அப்போதெல்லாம் அவர் ஒருவரையொருவர் வெறுக்காமல் வேறு என் செய்வார்! ஈன்றோர் கடமை,புத்திரர் கடமை, என்று போதிக்கும் கட்டுரைகளும்புராணக் கதைகளின்எடுத்துக்காட்டுகளும் பயனிலவாகின்றன. "என்தந்தை யென்றைக்குச்சாவானோ,அவன் ஈட்டிய பணம் என்கை என்றுவருமோ" என்று வாய்விட்டுக் கூறுகின்ற புத்திரசிகாமணிகளைச் சந்தித்தல் அருமையன்று. "எக்கேடு கெடுகின்றான், என் மகன், எவ்விடத்தேனும் சாகாமற் கிடந்தால் போதும்" என்று கூறும் தாயோ தன் மகனை இதனால் வாழ்த்துகின்றவளல்லள். இப்படிவிவகரிக்கின்ற மகனுடையபாவம் பெரிதேனும் அதனிற் பெரும்பகுதியை அவன் பெற்றோரும் பகிர்ந்துகொள்ள வேண்டியவர்களாயிருக்கின்றனர். தாங்களும் மிருகங்களாயிருந்து அவனையும் மிருகமாய் வளர்த்துவைத்ததால் வந்த சாபம் இது. இரைதேடிக் கொண்டுவந்து கொடுத்துத் தன் குஞ்சுகளை வளர்க்கும் குருவியைப் போலவும், வேட்டையாடத் தன்குட்டிக்குப் பயிற்றுவிக்கும்புலியைப்போலவும், பெரும்பாலோர் தம் மக்கள்பால்நேர்ந்த இயற்கை ஆசையால் அவர்கள் தம் யாக்கைக்கேதக்கஇரை தேடுதற்கு வேண்டிய சாதனங்களை அமைத்துத் தருவதோடு நின்றுவிடுகின்றனர். இப்படி யிவன் 'முன்னுக்கு' வருவதன் முடிவும் முன்னே கண்டவாறுவது வியப்பாமோ! அஃதின்றி, இயற்கையாய்த் தன்மகவின்பால் உண்டாய ஆசையை ஆதாரமாய் வைத்து, "நான் இவனுக்கு என்ன செய்துவைத்தால் எனது ஆசையை நிலைநிறுத்தினவனாவேன்? உலக தர்மத்தில் இம்மைந்தன் எந்த இடம் வகிக்கின்றான்? இவனைப் படைத்த கடவுளின் திருவுளம் யாவதாகுமோ?" என்று சிந்திப்பதற்கொத்த ஆராய்ச்சியும் கல்சரும் பெற்றோர்க்கு இருக்குமாயின், மற்றவர் பின்செலத் தன்மகன் முன்னுக்கு வரவேண்டும் என்பது உலக தர்மத்தில் எவ்விடத்திலு மில்லையென்பதும், "படிப்பும் எழுத்துமாய் அவன் கலப்பணம் சம்பாதித்து உயர்தர உத்தியோகங்கள்" செய்யவேண்டும் என்ற கருத்தேகொண்டு கடவுள் அவனைப் படைத்திரார் என்பதையும்அவர்ஒரு நொடிப்பொழுதில் அறிந்தவராவார். அறிந்தவராயின், ஈன்ற மகவை இயற்கையான ஆசையுடன் கொஞ்சிக் குலாவிக்கொண்டுவருங் காலத்திலேயே, பின்னாள் பலபடி முன்னேற வேண்டியதோர் வித்தாயும், தம்மைக் காப்பாற்றவேண்டிய கருவியாயும் தம் மக்களை மதிக்காமல், அவர்களைத் தெய்வத்தின் அம்சங்களாய் அழிவிலா ஆன்மாக்களாய் அறிந்து பெருமையுடன் பாராட்டி அப்பெருமைக்குரியநிலையை அம்மக்கள் அடையுமாறுபுரிதலே தாம் அவர்பால் கொண்டுள்ள இயற்கையுறவினாசைக் கேற்ற கடமையாகும் என்பதை உவந்து ஏற்றுக் கொள்வர். இப்பொழுதே அது கொள்கையாக மாறுகின்றது. இந்த மாறுதல் எய்தியவுடன் அவர் உறவு தூய்மையடைந்து திப்பியநிலை பெறுகின்றது. இனி அதற்கழிவில்லை. இன்பமன்றி அதனால்வேறொன்று எய்துவது மியலாது. எந்தைஈசன் நம்மை அன்புடன் ஆதரிக்கின்ற பான்மையிலேயே நாமும் நம் மக்களை ஆதரிப்பவராவோம். இவ்வுறவின் பெருமையும்தூய்மையும் இன்னபடியாகும். மற்றெல்லா உறவினாலும் வரும் உணர்வின் திறத்திலேயும் நமது நோக்கம் இவ்விதமே நிகழவேண்டும்—நிகழ்வதுமாகும்.

ஆதலின் தருமசிந்தனை, தெய்வசிந்தனை, புத்தி, என்னும்இவ்வியற்கையம்சங்களைச் சுயமாகக் கல்சர் செய்துகொள்ள வேண்டியது போலவே, இவ்வுறவினுணர்ச்சியாம் இயற்கை அம்சத்தையும் ஆராய்ச்சியின் உதவிகொண்டு கல்சர் செய்யவேண்டியது மிகவும் அவசியமாம்.

தமிழ்ப்பாடம் 122.

வில்லிபாரதம்—உத்தியோக பருவம்.

[329-வது பக்கத் தொடர்ச்சி]

கிருஷ்ணன் தூதுச் சருக்கம்

பிதாம கன்பரி வுடன்முனிந் துசில
பேச நாசமுறு பேரனும்
விதார மொய்ம்பனும் விதூர னல்லது
வில்வல்ல வீரர்பிற ரில்லையோ
வுதார சீலனுய ரங்கர்கோன் வரிவி
லொன்றுமே யமையு முற்றெழும்
பதாதி யோடம ரிலைவரும் படம
லைந்திடப் பரணி பாடவே. 64.

பரிவுடன் பேசிய பீஷ்மனுக்குத் துரியோதனன், விதூரன்இல்லையேல் வீரர் வேறொருவரும் இல்லையோ என்று எதிர் கூறுகின்றான்.

பதவுரை.

பிதாமகன் - பாட்டனாகிய பீஷ்மன், பரிவுடன் - வருத்தத்துடன், முனிந்து - கோபமடைந்து, சில பேச - சில வார்த்தைகளைச்சொல்ல, நாசம் உறு-நாசத்தை அடையும், பேரனும் - பேரனாகிய, விதாரம்- போரில், மொய்ம்பனும் - பராக்கிரமம் பொருந்திய துரியோதனனும்,

விதூரன் அல்லது - விதூரன் தவிர, வில் - வில்வித்தையில், வல்ல - வல்லவர்களான, வீரர் பிறர்-வேறு வீரர்கள், இல்லையோ - இல்லாமற் போயினரோ?

உதாரசீலன் - ஈகைக்குணத்தில் மிகச் சிறந்தவனும், உயர் - உயர்ந்த, அங்கர்கோன்- அங்கநாட்டுக்கு அதிபதியுமான கர்ணனது, வரி - கட்டு அமைந்த, வில் ஒன்றுமே - ஒரு வில் மாத்திரம், அமரில் - போரில், உற்று எழும் - பொருந்தி எழுகின்ற, பதாதியோடு - சேனைகளோடு,ஐவரும்-பாண்டவர்களும், பட-இறக்கும்படி, மலைந்திட - யுத்தம் செய்யவும், (அதனால்) பரணிபாடவே-என் வெற்றியைச் சிறப்பித்துக்கவிகள் பரணிபாடவும், அமையும் - போதியதாக அமையும் (என்று கூறினான்.)

நீயி ருக்க நெடுவிற்கை யாசிரிய
னவனி ருக்க நிகரற்றவன்
சேயி ருக்க விறன்மன்ன ரிப்படித்
திரண்டி ருக்கவெதிர் சென்றுநீள்
வேயி ருக்குமித ழிடைய னுக்குநல்
விருந்து செய்தவன் வெறுக்கிலென்
போயி ருக்கிலென் முறிக்கி லென்சிலை
மலைந்துநம்மொடெவர்போர்செய்வார் 65

ஏனைய 'வீரர் பலர் இருக்க விதுரன் இருந்தால் என், போனால் என்' என்று பின்னும் துரியோதனன் வீரம் பேசுகின்றான்.

பதவுரை.

நீ இருக்க-நீ இருக்கையில், நெடு வில் கை-பெரிய வில்லைக் கையிற்கொண்டுள்ள, ஆசிரியன்-ஆசிரியனை, அவன் இருக்க - துரோணன் இருக்கையில், நிகர் அற்றவன்-தனக்கு நிகர் இல்லாத துரோணனுடைய, சேய் இருக்க - பிள்ளையாகிய அச்வத்தாமன் இருக்கையில், விறல்மன்னர் - வலிமை பொருந்திய அரசர்கள், இப்படி - இந்தவிதம், திரண்டு இருக்க - குவிந்திருக்கையில்,

நீள் - நீண்ட, வேய் - புல்லாங்குழல், இருக்கும் - பொருந்தி இருக்கின்ற, இதழ் - உதடை உடைய, இடையனுக்கு - இடையனாகிய கிருஷ்ணனுக்கு, எதிர்சென்று - எதிர்கொண்டு சென்று, நல் - நல்ல, விருந்து செய்தவன் - விருந்திட்டு உபசரித்தவனாகிய விதுரன், வெறுக்கில் என் - வெறுத்தால் என்ன, போய் - பகைவர்பக்கம் போய், இருக்கில் என் - இருந்தால் என்ன, சிலை முறிக்கில் என்-வில்லைமுறித்தால் என்ன,

நம்மொடு - நம்மோடு, எவர் - எவர், மலைந்து - எதிர்த்து, போர்செய்வார் - போர்செய்ய வல்லவர்.

இலக்கணம்.

இரண்டுமுதல் ஏழுவரையில்அமைந்துள்ள வேற்றுமைத் தொடர்களிலும் ஏழுவாய்த்தொடரிலும் விளித்தொடரிலும்,யகர ரகர ழகர மெய்களில் ஒன்றையேனும் உயிரையேனும் இறுதியில் உடைய நிலைமொழி, வல்லினமெய்யை முதலிலுடைய வருமொழியோடு புணருங்கால் அவ்வல்லினமெய் மிகுந்து சில போதும் மிகாமற் சிலபோதும் புணர்கின்ற விதிகளை இதுவரையில் ஓதினோம்.இனி வினைமுற்றுத்தொடர், வினையெச்சத்தொடர், பெயரெச்சத்தொடர், உரிச்சொற்றொடர், இடைச்சொற் றொடர், அடுக்குத்தொடர் ஆகிய தொகாநிலைத்தொடர்களிலும், வினைத்தொகை, பண்புத்தொகை, உவமத்தொகை, உம்மைத்தொகை, ஆகிய தொகைநிலைத் தொடர்களிலும் வருமொழிமுதல் வல்லினமெய் நிலைமொழியீற்று யகர ரகர மெய்களோடும் உயிர்களோடும் புணரும் வகைகளைக் காண்போம். இத்தொடர்களின் இலக்கணங்களை முன்னர்ப் பல விடங்களில் கூறியிருக்கின்றோமாதலால் மறுபடி இங்குக் கூறவில்லை.

I வினைமுற்றுத்தோடர்:—

ஓடின குதிரை, பாடினர் கவிகள், எழுந்தது குதித்தது, என்பனபோல் நிலைமொழி வினைமுற்றுக்களாயிருக்குந் தொடர்கள் வினைமுற்றுத்தொடர்களாகும். வினைமுற்றுக்கள், குறிப்பு என்றும் தெரிநிலையென்றும் முன்னிலையென்றும் வியங்கோளென்றும் ஏவல் என்றும், உடன்பாடென்றும், எதிர்மறையென்றும், தன்வினை யென்றும் பிறவினை யென்றும், செய்வினை யென்றும் செயப்பாட்டு வினையென்றும் பல வகைப்படும் (வால்யூம். 5. பக்கம், 983.)

I வினைமுற்றுத்தொடரில், அது எவ்வகை வினைமுற்றாயிருப்பினும், வருமொழிமுதல் வல்லினமெய் பெரும்பான்மை மிகாமலே புணரும் என்னலாம்:—

சென்றனர் + சிறுவர் = சென்றனர்சிறுவர்—தெரிநிலை

பெரியது + பசு = பெரியது பசு—குறிப்பு.

வாராய் + குமர = வாராய் குமர } ஏவல்
பேசு + சிறுவ = பேசு சிறுவ }

வருக + பெரியோய் = வருகபெரியோய் } வியங்கோள்
வாழி + கொற்றவ = வாழி கொற்றவ }

வந்தீர் + பெரியீர் = வந்தீர் பெரியீர்—முன்னிலை.

உண்ணா + குதிரை = உண்ணா குதிரை—எதிர்மறை

ஓடினார் + சிலர் = ஓடினார் சிலர்—தன்வினை

ஆட்டினார் + குரங்கினை = ஆட்டினார் குரங்கினை—பிறவினை

குலுங்கியது + பூமி = குலுங்கியது பூமி—செய்வினை.

அழிக்கப்பட்டது + காடு = அழிக்கப்பட்டதுகாடு—செயப்பாட்டுவினை

II. பெரும்பான்மை மிகாமலே புணரும் என்று கூறினோமாதலால்,சிறுபான்மைவல்லினமெய்மிகுந்து புணரவுங் கூடும்:—

(a) நிலைமொழி வன்றொடர்க் குற்றியலுகரத்தில் முடிகின்ற ஏவலல்லாத மற்ற வினைமுற்றா யிருக்குமாயின், வருமொழிமுதல் வல்லினமெய் மிகும்:—

கூவிற்று + கோழி = கூவிற்றுக்கோழி

சிறுகட்டு + களிறு = சிறுகட்டுக்களிறு.

(கட்டுஎன்பது, கண் + து எனப்பிரிந்து கண்ணையுடையது என்று பொருள்படும் குறிப்பு வினைமுற்று)

குறிப்பு:—நிலைமொழி வன்றொடர்க் குற்றியலுகரத்தில் முடியுமாயினும் ஏவல் வினைமுற்றா யிருக்குமாயின் வருமொழி முதல் வல்லினமெய் மிகாது:—

நடத்து + பாகனே = நடத்து பாகனே.

ஓட்டு + குதிரையை = ஓட்டு குதிரையை

(b) நிலைமொழி நோ (வருந்து), து (உண்), என்னும் ஏவல்வினையாயிருக்குமாயின் வருமொழிமுதல் வல்லினமெய் மிகும்.

நொ + குமர = நொக் குமர.

து + குமர = துக் குமர.

J. வினையேச்சத் தோடர்.

I நிலைமொழி வினையெச்சமாயின்வருமொழிமுதல் வல்லினமெய் பெரும்பாலும் மிகுந்து புணரும்:—

போய் + பார்த்தான் = போய்ப்பார்த்தான்

எடுத்து + போட்டான் = எடுத்துப்போட்டான்

கூடி + சென்றான் = கூடிச்சென்றான்

பார்க்க + போனான் = பார்க்கப்போனான்

தருபாக்கு + சென்றார் = தருபாக்குச்சென்றார்

(உணவு) இன்றி + சோர்ந்தார் = (உணவு) இன்றிச்சோர்ந்தார்

காணா + கலங்கினான் = காணாக் கலங்கினான்.

II பெரும்பாலும் மிகும் என்றதால், மிகாமற் புணர்கின்ற இடங்கள் பின்வருமாறு:—

(a) நிலைமொழி செய்யிய என்னும் வாய்பாட்டு வினையெச்சமாயின், வருமொழிமுதல் வல்லின மெய் மிகாது.

காணிய + சென்றேன் = காணிய சென்றேள்.

கொல்லிய + புகுந்தான் = கொல்லிய புகுந்தான்.

(b) நிலைமொழி, உயிர்த்தொடர், இடைத்தொடர் மென்றொடர்க் குற்றியலுகரங்களை ஈற்றிலுடையதாயின் வருமொழி முதல் வல்லினமெய் மிகாது:—

அழுது + புரண்டாள் = அழுதுபுரண்டாள்—உயிர்த்தொடர்

வந்து + சேர்ந்தான் = வந்து சேர்ந்தான் } மென்றொடர்
நின்று + பார்த்தான் = நின்றுபார்த்தான் }
கண்டு + தொழுதான் = கண்டுதொழுதான் }

செய்து + சென்றான் = செய்து சென்றான் - இடைத்தொடர்.

K. பேயரேச்சத்தோடர்.

நிலைமொழி பெயரெச்சமாயின் வருமொழிமுதல் வல்லினமெய் மிகாது.

உடைந்த + பலகை = உடைந்த பலகை

அழுகிற + குழந்தை = அழுகிற குழந்தை

காணாத + காட்சி = காணாத காட்சி

செய்த + பெட்டி = செய்த பெட்டி

பெரி + தாழை = பெரிய தாழை

நல்ல + சங்கு = நல்லசங்கு

குறிப்பு:—நிலைமொழி ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சமாயிருந்தால் மாத்திரம் வருமொழிமுதல் வல்லினமெய் மிகும்:—

காணா + கண் = காணாக்கண் (காணாத கண்)

பாயா + புலி = பாயாப்புலி (பாயாத புலி)

கேளா + செவி = கேளாச்செவி (கேளாத செவி)

குறிப்பு:—உண்ணா, ஓடா, நில்லா என்பனபோ லிருக்கும் செய்யா என்னும் வாய்பாட்டு வினை, எதிர்மறை வினைமுற்றாகவும், உடன்பாட்டு வினையெச்சமாகவும், எதிர்மறை வினையெச்சமாகவும், ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சமாகவும் வரக்கூடுமென்பதை முன்னரே கூறியிருக்கின்றோம். இது, புல்உண்ணா புலிகள், என்பதுபோல் எதிர்மறை வினைமுற்றாய் வரும்போது வருமொழிமுதல்வல்லினமெய் மிகாது. மற்ற இடங்களில் எல்லாம் மிகும்.

இரவொன்றிற் பல பிழைகள்

[Oliver Goldsmith's—"She Stoops to Conquer"]

அங்கம் 3. களம். 1

[324-வது பக்கத் தொடர்ச்சி]

[டோனி ஒரு பெட்டியை எடுத்துக் கொண்டு ஓடிவருகிறான்]

டோனி:—பேஷடா! எடுத்துவிட்டேன்! இதோ இருக்கிறது. நெவில்லியின் அட்டிகை, பதக்கம், எல்லாம். அவள் ஆஸ்தியை என் தாயார் மோசம்செய்ய விடமாட்டேன். ஆஹா! நீதானா?

[ஹேஸ்ட்டிங்ஸ் வருகிறான்]

ஹேஸ்ட்:—எனது அருமை நண்பா, உன் தாயாரை என்ன பண்ணினாய்? நெவில்லியை நீ காதலிப்பதாகவும், கடைசியில் அவளை மணக்கச் சம்மதிப்பதாகவும் அவள் நம்பும்படி நடித்தாய் என்று நினைக்கின்றேன். எங்கள் குதிரைகள் விரைவில் களைப்பாறிவிடும்; உடனே புறப்பட்டுவிடுவோம்.

டோனி:—உங்கள் வழிச்செலவிற்கு உதவும்படி ஏதோ கொஞ்சம் இதில் இருக்கிறது (பெட்டியைக் கொடுக்கிறான்). உன் காதலியின் நகைகள். வைத்துக்கொள். அதனை உங்களிடத்திலிருந்து அபகரிக்கிறவர்களைக் கொன்றுவிடு.

ஹேஸ்ட்:—உன் தாயினிடத்திலிருந்து இவைகளை எப்படிக் கைப்பற்றிக்கொண்டாய்?

டோனி:—என்னைக் கேள்வியொன்றும் கேட்க வேண்டாம். நானும் உன்னிடத்தில் பொய்யொன்றும் சொல்லமாட்டேன். அவைகளைக் கைப்பற்றும் விதம் என் விரலிலிருக்கிறது. என் தாயாரின் பெட்டி ஒவ்வொன்றிற்கும் ஒரு சாவி என்னிடம் இல்லாமற் போனால், என் உல்லாசச் செலவிற்கு வேறு என்ன வழியிருக்கிறது. வேண்டியபோது தன்னுடைய பணத்தைத்தானே திருடிக்கொள்ளலாமல்லவா ஒரு யோக்கியன்.

ஹேஸ்ட்:—ஆயிரமாயிரம் பேர் நாள்தோறும்அப்படித்தான் செய்கின்றனர். ஆயினும், என் மனதிலிருப்பதை ஒளிக்காமல் சொல்கிறேன்; தன் அத்தையினிடமிருந்து இந்நகைகளை எப்படியாவது கேட்டு வாங்கிக்கொள்ள நெவில்லி இந்த நிமிஷம் முயன்று கொண்டிருக்கிறாள். அது பலிக்குமானால், இந்நகைகளை அடைவதற்கு அதுவே அழகான வழியென்று எனக்குத் தோன்றுகின்றது.

டோனி:—நல்லது, அதன் முடிவு தெரிகிற வரையில் இவைகளை வைத்துக்கொண்டிரு. முடிவு என்னவென்று எனக்கோ இப்பொழுதே தெரியும். அவள் தலையில் சொத்தை விழாமல் இருக்கிற அந்த ஒரு பல்லையும் கொடுத்துவிட்டாலும் விடுவாள், இந்த நகைகளை மாத்திரம் கொடுக்கமாட்டாள்.

ஹேஸ்ட்:—இருந்தாலும், இவை காணாமற் போனது தெரிந்ததும் அவளுக்கு வரக்கூடிய கோபத்திற்கு அஞ்சுகின்றேன் நான்.

டோனி:—அந்தக் கோபத்தை நீ கவனிக்கவே வேண்டாம். அவளைக் கைபாள்வதற்கு என்னை விட்டுவிடு. அவள் கோப வெடுவெடுப்பை யெல்லாம் நான் ஒருபட்டாஸ்வெடியைவிட அதிகமாகமதிப்பதில்லை. அடெயடெ! இதோ வந்துவிட்டார்களே.

[ஹேஸ்ட்டிங்ஸ் போகிறான்]

[டோரதியும் நெவில்லியும் வருகின்றனர்]

டோரதி:—என்னவிது, நெவில்லி, ஆச்சரியமாயிருக்கின்றதே. உன்னைப்போன்ற ஒரு பெண்ணிற்கு நகைகளும் வேண்டுமா! இருபது வருஷம் பொறுத்து, என் கண்ணே, உன் அழகைப் பழுதுபார்க்க அவசியம் நேரிடும்போது அல்லவோ, நகைகள் வேண்டிய காலம் வரும்.

நெவில்லி:—என்ன அத்தை, இது! நாற்பது வயதில் போன அழகைப் பழுதுபார்க்க உதவுவதானால் அது, இருபது வயதில் இருக்கின்ற அழகை அதிகப்படுத்த உதவாமற் போய்விடுமா!

டோரதி:—உன் அழகிலோ, என் செல்வமே, அதிகமாவதற்கு இடமேயில்லையே. இதோ, இயற்கையாகச் சிவக்கின்றதே உன் கன்னம், ஆயிரம் நகைகள் அதற்கப்புறந்தானம்மா; அதுவன்றியும், குழந்தாய், தற்காலம் நகைகள் நடமாட்டமற்றுப் போய்விட்டன. நமக்குத்தெரிந்த மாதர்களில் எத்தனையோபேர் நகைகளைப் பட்டினத்திற்குக் கொண்டுபோய், அதற்குப்பதிலாக, முகத்தில் பூசும் வர்ணமும் வாசனைப் பொடிகளும் தவிர வேறொன்றும்கொண்டுவராததை நீ கவனிக்கவில்லையா ?

நெவில்லி:—நான் இந்த நகைகளால் அலங்காரம் செய்துகொண்டிருக்கவேண்டுமென்றே ஒருவர், அவர் பேரைச்சொல்லமாட்டேன், விரும்பலாமே, அத்தை.

டோரதி:—கண்ணாடியில்உன்னைப்பார்த்துக்கொள்; அப்புறம், ஒளி வீசும் இந்தக்கண்கள் இரண்டிற்கு ...

M211,N28KW
N24.7.22
199172

உனக்கு வைரங்களும் வேண்டுமோ, சொல். டோனி என் அன்பே, நீ என்ன நினைக்கிறாய்? இவள் அழகை உன் கண்களுக்கு எடுத்துக்காட்ட நகைகள் வேண்டுமோ சொல்?

டோனி:—அப்புறம் எப்படியிருக்குமோ.

நெவில்லி:—அத்தை, அத்தை, என்னருமை அத்தையே, இந்த நகைகளைக்கொடுப்பது எனக்கு எவ்வளவு உபகாரமாயிருக்குமென்பது தெரிந்தால்—

டோரதி:—அவைகளெல்லாம் பழையமாதிரி நகைகளம்மா; தெருக்கூத்தாடிச்சிபோலத் தோன்றுவாய். இதெல்லாம் கிடக்க, நினைத்தவுடன் அவை என் கைக்கு அகப்படுவதும் சந்தேகம். காணமற் போயிருப்பினும் இருக்கலாம், எப்படிச் சொல்லமுடியும்.

டோனி:—(டோரதிக்கு ஒருபுறமாய்) பின், உடனே அவளுக்கு அப்படியே சொல்லிவிடுவதுதானே. காணமற்போய்விட்டன என்று சொல்லிவிடு. அவள் வாயை அடக்க அது ஒன்றுதான் வழி. கெட்டுப் போய்விட்டன என்று சொல்லிச் சாக்ஷிக்கு என்னைக் கூப்பிடு.

டோரதி:—(டோனிக்கு ஒருபுறமாய்). உனக்காகத் தான் நான் அவைகளைக்கைப்பற்றிவைத்திருக்கிறேன் என்று தெரியுமல்லவா, கண்ணே. ஆகையால், அவைகளை இழந்துவிட்டேன் என்று நான் சொன்னால், நீ சாக்ஷிக்கு வருவது தகுதிதான். ஹ! ஹ! ஹ!

டோனி:—சந்தேகப்படாதே. அடெயடெ! அவைகளை எடுக்கும்போது நானே என் கண்களால் பார்த்தேன் என்று சொல்கிறேன்.

நெவில்லி:—ஒருநாளாவது அவைகளை அணிந்துகொள்ளவேண்டுமென்று ஆசையாயிருக்கிறது. அப்புறம் கொடுத்துவிடுகிறேன்; வைத்துப் பூட்டிவிடு.

டோரதி:—ஒளிக்காமல் சொல்கிறேன் கேள். நெவில்லி, அவை அகப்படுமானால் கொடுக்கிறேன். இப்பொழுது காணவில்லை, நிச்சயம். இழந்தே விட்டேனோ என்னவோ, எப்படித் தெரியும். அவை எங்கிருந்தாலும், நாம் பொறுமையா யிருக்கவேண்டும்.

நெவில்லி:—நானிதை நம்பமாட்டேன். எனக்குக் கொடுக்கப்படாதென்பதற்குச் சொல்லுகிற ஒரு கட்டுக்கதையே இது. அவை எவ்வளவு விலையுயர்ந்ததை, நீங்களும் அதற்குப் பொறுப்பாளி, எல்லார் கைக்கும் எட்டும்படி வைத்திருந்தீர்களென்றால், யார் நம்புவார்!

டோரதி:—நெவில்லி, நீ ஒன்றற்கும் பயப்படவேண்டாம். அவைகள் கெட்டுப்போய் விட்டால், சரிக்குச் சரி நானே கொடுத்து ஈடுசெய்வேன். இப்பொழுது அவை காணமற் போயிருக்கின்றன என்பது என் பிள்ளைக்குந் தெரியும்.

டோனி:—அதற்கு நான் சாக்ஷி. நகை காணமற் போய்விட்டது, இனி உன் அத்தைகைக்கு அகப்படாது; என்ன சத்தியம்வேணுமானாலும்செய்கிறேன்.

டோரதி:—போனாற் போகட்டும் என்று இருக்கக் கற்றுக்கொள்ள வேண்டுமடீ, என் கண்ணே; நம்முடைய ஆஸ்த்தியை யெல்லாம் இழந்தாலும் பொறுமையை மாத்திரம் இழக்கப்படாது நான் எவ்வளவு சாந்தமாக இருக்கிறேன், பார்.

நெவில்லி:—ஆம் ஆம்! மற்றவர் நஷ்டத்தைக் கண்டு சாந்தமாயிருப்பது சனங்களுக்குச் சகஜந்தான்.

டோரதி:—உன்னைப்போன்ற அறிவுடைய ஒரு பெண், ஒன்றிற்கும் உதவாத இந்நகைகளைப் பற்றி நினைப்பதும் நினைப்பதாவென்று எனக்குஆச்சரியமாயிருக்கின்றது. சீக்கிரத்தில் அவை அகப்பட்டுவிடும். அதுவரையில் என்னுடைய கெம்புமணி மாலையைப் போட்டுக்கொண்டிரு.

நெவில்லி:—கெம்புமணி மாலை எனக்கு வேண்டாம்.

டோரதி:—உன் அழகிய மேனியைஅது சிறப்பாக எடுத்துக்காட்டுமே. எனக்கு அது எவ்வளவு நன்றாக இருக்கின்றதென்பதை நீ பார்த்ததில்லையா! தருகிறேன், வைத்துக்கொள். (போகிறாள்)

நெவில்லி:—அதை அடியோடு வெறுக்கிறேன். என் நகைகளை எங்கேயோ வைத்துவிட்டு ஒன்றற்கும் உதவாத தன்னுடையதை நான் அணியவேண்டும் என்று இப்படி வற்புறுத்தினால் யார் பொறுப்பார்.

டோனி:—சீ! அசடே! அவள் தன் மணிமாலையைக் கொடுப்பாளானால், அகப்பட்டதைச் சுருட்டிக் கொள். முன்னேயே உன் நகைகள் உன்னுடையவைகள் ஆய்விட்டன. நானே அவைகளை அவள் பெட்டியிலிருந்து திருடிவிட்டேன். அது அவளுக்குத் தெரியாது. உன் காதலனிடத்திற்கு ஓடிச்செல், மற்றதெல்லாம் சொல்வார் அவர். இவளை நான்பார்த்துக் கொள்கிறேன்.

நெவில்லி:—என் அருமை டோனி!

டோனி:— ஓடி மறைந்துவிடு, திரும்பிவிட்டாள் இவள். நகைகள் காணவில்லை என்பது தெரிந்துவிட்டது. அடெயடெ! எப்படிக் குதித்து எப்படிச் சுழல்கிறாள் பார்.

[டோரதி வருகிறாள்]

டோரதி:—படுகேடு படுகேடு! திருடர் திருடர்! கொள்ளைக்காரர், கொள்ளைக்காரர்! மோசம் போனோம், கொள்ளை கொடுத்தோம்! கெட்டது குடி!

டோனி:—என்ன சமாசாரம், என்ன சமாசாரம், அம்மா? நம் நல்ல குடும்பத்தில் யாருக்காவது ஏதாவது நேர்ந்துவிட்டதா!

டோரதி:—கொள்ளையோ, கொள்ளை! பூட்டைத் திறந்து யாரோ நகைகளைக் கொண்டுபோய்விட்டார்கள். நம் குடி கெட்டது!

டோனி:—ஓஹோ! இவ்வளவுதானா! ஹ! ஹ! ஹா! இவ்வளவு நன்றாக நீ நடித்து என் ஜன்மத்தில் நான் இதுவரையிற் பார்த்ததில்லை அடெயடெ! நிசமாகத்தான் உனக்குஏதோ கேடுவந்துவிட்டதென்றல்லவோ, எண்ணினேன். ஹ! ஹ! ஹா!

டோரதி:—அடெ, பையா, நிசமாகத்தானடா கெட்டேன். பெட்டியை உடைத்து...எல்லாம் போய் விட்டதடா.

டோனி:—விடாதே, இதை; கெட்டியாகப் பிடித்துக்கொள்; ஹ! ஹ! ஹா! விடாதே, பிடித்துக்கொள். நான் சொல்கிறேன் சாக்ஷி; என்னைச் சாக்ஷி சொல்லக் கூப்பிடு.

டோரதி:—அடே, டோனி, போய்விட்டதடா நகைகள்; அடியோடு கெட்டேனடா நான்.

டோனி:—அது போய்விட்டதென்பது எனக்கும் நிச்சயமாகத் தெரியும். நான் அப்படித்தானே சொல்லவேண்டும்?

டோரதி:—அட என் கண்ணே, நான் சொல்வதைக் கேளடா, அவை தொலைந்ததடா.

டோனி:—அம்மா, உன் சொல்லைக் கேட்க, எனக்குச் சிரிப்பு வயிறு அறுகிறது. ஹ! ஹ!! எடுத்தது யாரென்று சந்தேகமில்லாமல் எனக்குத் தெரியும், ஹ! ஹ! ஹா!

டோரதி:—விளையாட்டிற்கும் வினைக்கும் வித்தியாசம் தெரியாத மடையன் இதைப்போல எங்கேயாவது இருந்ததுண்டா? ஏ, குரங்கே, நான் விளையாடவில்லையடா.

டோனி:—அதுதான் சரி! அதுதான் சரி! இப்படித்தான் அட்டகாசம் பண்ணவேண்டும். அப்பொழுதுதான் நம்மிருவர் மேலும் யாரும் சந்தேகங் கொள்ளமாட்டார். அது போய்விட்டதென்பதற்கு நான் சொல்கிறேன் சாக்ஷி.

டோரதி:—சொல்வதை உணராத மூர்க்கமிருகம் இதுபோல உண்டா! மடையனே தவிரவேறொன்றும் இல்லை என்பதற்குச் சாக்ஷி சொல்லடா, பிணமே. மூடர்கள் ஒரு பக்கமும் திருடர்கள் மறுபக்கமும் சேர்ந்து இப்படி ஒருத்தியை வதைத்தது இதுவரையில் உண்டா?

டோனி:—நான் சாக்ஷி அதற்கு.

டோரதி:—இன்னொருதரம் சாக்ஷி சொல், ஏ முழுமூடமே அடித்துத் துரத்திவிடுகிறேன் பார் உன்னை. பாவம், நெவில்லியின் கதி என்னவாகும்? நான் படுகிற துன்பத்தைக்கண்டு சந்தோஷமாகச் சிரிக்கிறாயா நீ, ஏ, உணர்ச்சியற்ற மிருகமே.

டோனி:—நான் சாக்ஷி அதற்கு.

டோரதி —ஏ இராக்ஷஸா! என்னை ஏனடா இப்படி நிந்திக்கிறாய். உன் தாயின் வயிற்றெரிச்சலைக் கொட்டிக்கொள்வதற்கு என்ன செய்கிறேன், சற்றே பார்.

டோனி:—அதற்கும் நானே சாக்ஷி!

[டோனி ஓடுகிறான். டோரதி அவனைத் துரத்திக்கொண்டு போகிறாள்.]

கம்பராமாயணம்

கிஷ்கிந்தாகாண்டம்—5. துந்துபிப் படலம்

[335-வது பக்கத் தொடர்ச்சி]

தம்பியின் திறமையு மன்ன தன்மையே.

எளிதிலவர்க் குதவியாய் வந்துநின்ற இராமனதுபேராற்றலைச் சுக்கிரீவனுக்கு மெய்ப்பிக்கும்வண்ணம் சோதனை சூழ்ந்து சொன்ன அனுமன், மராமரத்தினோடு அமைந்தானல்லது துந்துபியின் உலர்ந்த எலும்புக் குவையைக்குறிவைத்தானல்லன். வான்மீகத்தில் தனக்குவேண்டிய சோதனையைத் தானே குறித்தமைத்த சுக்கிரீவன், மாயாவியின் தந்தையாகிய துந்துபியின் ஆற்றலையும் அன்னவனை வாலி தன் கைகளாற்பிசைந்து அம்மலையின்மீது எறிந்ததையும் இயம்பி, "இராமர் இவ்வேழு ஆச்சாமரங்களில் ஒன்றை ஒருபாணந்தாலெய்வாராயினும், வாலியால் முன்கொல்லப்பட்ட இவ்வசுரனுடைய எலும்பைத் தமது ஒற்றைக்கால் விரலால் எற்றி இருநூறு அம்புதூரம் எறிவாராயினும் வாலி மாண்டதாக எண்ணுவேன்" என்றனன். உடனே இராமன், "என்னுடைய ஆண்மையில் உமக்குச் சந்தேகமிருக்குமாயின் அதை இப்போது தீர்த்துவிடுகிறேன்" என அத் துந்துபியின் முழுஎலும்பைத் தன் காற் பெருவிரலால் விளையாட்டாகப் பத்துயோசனைக் கப்பால் எற்றிவிட்டான். ஆயினும் சுக்கிரீவனுக்கோ ஒன்றும் ஊக்கம் பெருகவில்லை. "நண்ப, இந்த உடலை முன் சதைபற்றி ஈரமாக இருந்தபோது என் தமையன் எறிந்தான். இப்போது இது தசைகழிந்து புல்லைப்போன்று இலேசாயிருக்கின்றது. அப்போது அவ்வாலி யுத்தஞ்செய்து களைத்தும் கள்ளுண்டு மயங்கியுமிருந்தான்; நீர் இப்போது நல்லறிவுடன் இருக்கிறீர். ஆகையால் இதைக்கொண்டு உங்களிருவரில் பலவான் இன்னாரென்று அறியக்கூடவில்லை. ஈரமுள்ளதற்கும் உலர்ந்ததற்கும் மிகவும் வித்தியாசம் உளதன்றோ? ஆகையால் என் ஐயம் நீங்கவில்லை. நீர் இவ்வாச்சாமரங்களில் ஒன்றைத் துளைப்பீராயின் உம்முடைய பலம் இவ்வளவென்பதைநான் அறிந்துகொள்வேன்" என்றனன். "லோகநாத: சுக்ரீவம் நாத மிச்சதி"—வேறென்! அந்தச் சுக்கிரீவநாதன் ஆட்டிவைத்தபடி ஆடாதார் யாரே என்ன இந்த லோகநாதனும் ஆச்சாமரங்களை அடிக்கப் புறப்பட்டான். லோகநாதன் சுக்கிரீவனைத் தனக்கு நாதனாய் அடைய இச்சித்த இச்சை நிறைவேறுவதற்கு அப்படியெல்லாம் அங்கு அடங்கிநடப்பது அவசியமாயிற்று. கம்பர் நூலிலோ, இராமபிரான் லோகநாதனே என்பதைச் சுக்கிரீவனுக்கு ரூபிக்கவேண்டிய அனுமன், செய்வோனுக்கும் காண்போனுக்கும்ஏற்கும்படி இம் மராமரச் சோதனை ஒன்றுமே போதுமென எண்ணி உரைத்தமையால், துந்துபியின் என்புமலை இங்கு ஓர் சோதனைப் பொருளாக நிற்கவில்லை. ஆயினும், நெடுநாள் கிடந்த அம்மலையின் இருக்கையைவிட்டு அது பெயராமலும் இருக்கவில்லை. எனின், அது பெயரநேர்ந்த விதம் பின்வருமாறு:—

உயர்வுநவிற்சி யெல்லாம் பின்னிடும்படி முன்னே ஓங்கி வளர்ந்திருந்த அம் மராமரங்கள் ஏழும் துளை எய்த எய்தபின் இராகவன், தென்பால் திசையுறை தருமன் ஊர்தியாம் அம்மயிடமோ எனும்படி கிடந்த துந்துபியின் உடலத்தைக் காட்டி, இது யாதெனவினவச் சுக்கிரீவன் சொல்லலுற்றான்.

துந்துபிப் பெயருடைச் சுடுசினத் தவுணன்மீ
திந்துவைத்தொடநிமிர்ந் தெழுமருப் பிணையினன்
மந்தரக் கிரியெனப் பெரியவன் மகரநீர்
சிந்திடக் கருநிறத ்தரியினைத் தேடுவான்

[துந்துபி என்னும் பெயருடைய, சுடுகின்ற கோபமுடைய அசுரன். மேலுள்ள சந்திரனைத் தொடும்படி ஓங்கி வளர்ந்த இரண்டு கொம்புகளை யுடையவன். மந்தர மலைபோலச் சென்று, பெரிய வலிய மீன்களை யுடைய பாற்கடலின் நீர் சிதறும்படி, கரியநிறமுடையதிருமாலைத்தேடலானான்.]

அங்குவந் தரியெதிர்ந் தமைதியென் னென்றலும்
பொங்குவெஞ் செருவினிற் பொருதியென் றுரைசெயக்
கங்கையின் கணவனக் கறைமிடற் றிறைவனை
உங்கள்வெங் கதவலிக் கொருவனென் றுரைசெய்தான்

[அப்பொழுது திருமால் அவனெதிர் வந்து, "நீ இப்படிக் கலக்குவதற்குக் காரணம் என்ன" வென்று கேட்க

வும், "கோபிக்கின்ற கொடிய யுத்தத்தில் என்னுடன் நீ போர்செய்வாய்" என்று துந்துபி சொல்ல, திருமால், "கங்கைக்குத் தலைவனாகிய கறுத்த கழுத்தையுடைய சிவபிரானே, உங்கள் போன்ற கொடிய வேகமுடைய பலத்துக்கு ஏற்றபடி போர்செய்ய வல்லவன்" என்று கூறினன்]

கடிதுசென் றவனுமக் கடவுடன் கைலையைக்
கொடியகொம் பினின்மடுத் தெழுதலுங் குறுகிமுன்
நொடிதிநின் குறையெனென் றலுநுவன் றனனரோ
முடிவில்வெஞ்செருவெனக்கருள்செய்வான்முயல்கெனா.

[அவ்வசுரனும் விரைவாகச் சென்று அச்சிவபிரானது கைலாய மலையைத் தன் கொடிய கொம்புகளால் ஏந்திக்கொண்டு கிளம்பவும், சிவபிரான் அவனெதிரில் வந்து, 'உனக்கு வேண்டுவதைச் சொல்' என்று வினவியவுடன், அத் துந்துபி, "முடிவில்லாத கொடிய போர் என்னுடன் செய்வதற்கு நீ முயன்றருள வேண்டும்" என்றான்.]

மூலமே வீரமே மூடினா யோடுபோ
ரேனுமே தேவர்பா லேகனா வேவினன்
சாலநாள் போர்செய்வா யாதியேற் சாரல்போர்
வாலிபா லேகெனா வானுளோர் வானுளான்

[அதற்குப் பரமசிவன், வீரம் என்னும் அதன் மூலமே போன்ற உன்னோடு போர்செய்ய என்னாலாகுமா; ஆகையால் தேவர்களிடம்போவாய், என்று ஏவினான். அவ்வாறே இவன் சென்று தேவர்களைச் சண்டைக்கிழுக்க, வானுலகத்திலுள்ள தலைவனான இந்திரன், 'நெடுநாள் நீ சண்டைசெய்ய விரும்புவாயானால், இங்கு வராதே, மற்று, போர் வல்ல வாலியினிடம் போ' என்று கூறி]

அன்னவன் விடவுவந் தவனுமுவந் தரிகடம்
மன்னவன் வருகபோர் செய்கெனா மலையினைச்
சின்னபின் னம்படுத் தெய்தலுஞ் சினவியென்
முன்னவன் முன்னர்வந் தனையவன் முனைதலும்

[அவ்விந்திரன் அனுப்ப, துந்துபியும் மகிழ்ந்துவந்து, "குரங்குகளுக்கரசனே, வந்து போர் செய்க" என்று அம்மலையைச் சின்னபின்னமாக்கி அடைந்த அளவில், என் தமையன் கோபித்து எதிர்வந்து போர்செய்தவளவில்]

தீயெழுந் ததுவிசும் புறநெடுந் திசையெலாம்
போயெழுந் ததுமுழக் குடனெழுந் ததுபுகை
தோயநன் புணரியுஞ் சுடர்தடங் கிரிகளுஞ்
சாயழிந் தனவடித் தலமெடுத் திடுதலால்

[இவ்விருவரும் கால்களை எடுத்துவைத்தலால் ஆகாயம் வரையில் நெருப்பு எழுந்தது. அம் முழக்கம் பெரிய திக்குக்களெல்லாம் போய்ப் பரவியது. புகையும் கிளம்பியது. நீருடைய நல்ல கடலும், விளங்குகின்ற பெரிய மலைகளும் தத்தம் நிலையழிந்தன.]

இன்னவாறு கொடும்போர் புரிந்தவண்ணம் ஒரு வருடகாலம் நடக்க,

அற்றதா கியசெருப் புரிவுறும் அளவினிற்
கொற்றவா லியுமவன் குவவுதோள் வலிபொடிம்
பற்றியா சையினெடும் பணைமருப் பிணைபறித்
தெற்றினா னவனும்வா னிடியினின் றரறினான்

[அத்தகைய போர்புரிகின்றபொழுதில் வெற்றியுடைய வாலியும், திரண்ட தன் தோள்களின் வலிமைகொண்டு, அவ்வசுரனது திக்குக்கள் அளவு நீண்ட பருத்த இரண்டு கொம்புகளையும் பிடித்துப் பிடுங்கி அவற்றைக்கொண்டே அவனை அடித்தான். துந்துபியும் மேகத்தின் இடிபோல் கர்ச்சித்து நின்றான்.]

தலையின்மே லடிபடக் கடிதுசாய் நெடிதுதாள்
உலையவாய் முழைதிறந் துதிரவா றொழுகமா
மலையின்மே லுருமிடித்தென்ன வான்மண்ணொடுங்
குலையமா திசைகளுஞ் செவிடுறக் குத்தினான்.

[தலைமேல் அடிபட, விரைவில் சாய்கின்ற பெரிய கால்கள் ஒடிய, குகைபோன்ற வாய்திறந்து இரத்த ஆறு பெருக, வானமும் பூமியும் நடுங்க, பெரிய திசைகள் செவிடுபட, பெரியமலையின்மேல்இடியிடித்ததுபோல், வாலி அவ்வசுரனைக் குத்தினான்.]

கவரியிங் கிதுவெனக் கரதலங் கொடுதிரித்
திவர்தலுங் குருதிபட் டிசைதொறுந் திசைதொறுந்
துவரணிந் தனவெனப் பொசிதுதைந் தனதுணைப்
பவர்நெடும் பணைமதப் பகையின்வன் கரிகளே

[சாமரமோ என்று சொல்லும்படி வாலி தன் கையினால் துந்துபியை யெடுத்துச் சுழற்றிச் சுழன்றவளவில், அத் துந்துபியின் இரத்தம் சிதறிப் படும்போதெல்லாம், திசைகளில் உள்ள, இரண்டாக நெருங்கி நீண்ட தந்தங்களையும் மதத்தையும் பகையையும் உடைய வலிய யானைகள் செந்நிறம்பூசப்பட்டனபோல அந்த இரத்தம் பொருந்தப் பெற்றன]

புயல்கடந் திரவிதன் புகல்கடந் தபலுளோ
ரியலுமண் டிலமிகந் தெனையவுந் தவிரமேல்
வயிரவன் கரதலத் தவன்வலித் தெறியவன்
றுயிரும்விண் படரவிவ் வுடலுமிப் பரிசரோ

[அவ்வாறு சுழற்றி, பின், மேகமண்டலத்தைக்கடந்து, சூரிய மண்டலத்தையுங் கடந்து, ஏனையோர் சஞ்சரிக்கின்ற எல்லா மண்டலங்களையுங் கடந்து, மற்றவைகளையுங் கடக்கும்படி, வயிரமுடைய வலிய தன் கையினால் அந்தத் துந்துபியை வலிமையோடு மேலே எறிய, அப்பொழுது, அவன் உயிர் மேலுலகஞ் செல்ல இவ்வுடலும் இப்படிக் கீழே விழுந்தது.]

முட்டிவான் முகடுசென் றளவியிம் முடையுடற்
கட்டிமால் வரையைவந் துறுதலுங் கருணையா
னிட்டசா பமுமெனக் குதவுமிவ் வியல்பினிற்
பட்டவா முழுவதும் பரிவினா லுரைசெய்தான்

[முடைநாற்றமுடைய இவ்வுடற்பிண்டம், ஆகாயத்தின் முகட்டை முட்டிப்போய் எட்டி இந்தப் பெரிய இருசியமூக மலையை வந்து சேர்தலும், கருணையுடைய மதங்க முனிவர், இதனைச் செய்தவன் இம்மலையில் வந்தால் இறக்கக் கடவான் என்று இட்ட சாபமும் எனக்கு இப்பொழுது உதவியாயிருக்கின்றது, என்று இவ்விதம் நேர்ந்த வரலாறு முழுவதையும் சுக்கிரீவன் அன்போடு சொன்னான்.]

இன்னவாறு துந்துபியின் எலும்பு அம்மலையில் கிடக்கநேர்ந்த தன்மையைச் சுக்கிரீவன் சொன்னனேயன்றி அதனை எறியும்படி அவன் இராமனை ஏவவில்லை. ஆயினும்,

கேட்டன னமலனுங் கிளந்த வாறெலாம்
வாட்டொழி லிளவலை யிதனை மைந்தநீ
யோட்டென வவன்கழல் விரலி னுந்தினான்
மீட்டது விரிஞ்சனா டுற்று மீண்டதே.

[இராமன் சுக்கிரீவன் சொன்னவை முழுவதையுங்கேட்டு, வாள் தொழிலில் வல்ல தன் தம்பி இலக்ஷ்மணனைப் பார்த்து, மைந்தனே, இவ்வுடலை எறி, என்று கட்டளையிட, இலக்ஷ்மணன் தன் கால் விரலால் தள்ளினான். அவ்வெலும்புக் குவியல் மறுபடியும் பிரம்மலோகம் வரையில் சென்று திரும்பிவந்து விழுந்தது.]

அயல்நின்ற இத்தம்பியின் திறம் எத்துணைத்தோ என்று சுக்கிரீவன் முதலாயினோர் அயிர்த்திராவண்ணம் இலக்குவனைக்கொண்டு இராமபிரான் இதனைச் செய்வித்தானென்னுந் தன்மை வெளிப்படை. இது கண்ட குரங்கின் கூட்டம் இடியும் அஞ்சும்படி வாய் திறந்தார்த்தது. இராமனும் ஏனையோருடன் சென்றோர் சோலையில் தங்கினான்.

துந்துபிப்படலம் முற்றிற்று.

இரவீந்திரநாதர் கட்டுரைகள்

[303-வது பக்கத் தொடர்ச்சி]

இயற்கைத் தருமம்.

வீட்டின் மூலையில் ஓர் விளக்கை ஏற்றிவைக்க வேண்டுமேயாகில் எத்தனைவிதமான ஆபத்தங்களை நான் அதற்காகச் செய்யவேண்டும். கடுகு எங்கேவிளைவிக்கின்றார்கள் என்றும், செக்கில் எண்ணெய் எங்கே ஆட்டுகிறார்கள் என்றும், அதனை எங்கே விற்கின்றார்கள் என்றும் அறியவேண்டும். இதன் பிறகு ஒருதீபத்தைச்செய்து அலங்கரிக்க எத்தனைப் பிரயாசம். இத்தனைப் பிரயாசைப்பட்டும் அவ்விளக்கினால் கிடைக்கின்ற வெளிச்சம் எவ்வளவு அற்பமானது! அறையினுள் நான் செய்யும்வேலை, அவ்வெளிச்சத்தைக்கொண்டு ஓர்விதமாக நடந்தேறக்கூடும்; ஆயினும், அறைக்குப் புறத்தேயிருக்கும் இருளானது மும்மடங்கு அதிகம் கருமை அடைந்து தோன்றுகின்றது. ஆகாய வெளியில் பிரகாசிக்கின்ற கதிரவனின் ஒளியைப் பெற்றுக்கொள்வதற்கு யாருடைய உதவியும் எனக்கு வேண்டியதில்லை. நான் விழிப்படையவேண்டியது மாத்திரமே அவசியம். கண்விழித்து அறையின் கதவுகளைத் திறந்துவைப்பேனானால் உடனே அவ் வொளியானது உள்ளே பிரவேசிக்காமல் ஒருவராலு மதனை வெளியே மறித்துவைக்க இயலாது. விளக்கு வெளிச்சத்திற்கும் கதிரவன் ஒளிக்கும் உள்ள வேற்றுமை இது.

கதிரவனது ஒளியைப் பார்ப்பதற்கு மிகவும் இரகசியமான ஓர்மந்திரம்எங்கேயோ மறைவில் இருக்கின்றதென்று யாராவது இயம்புவார்களேயானால் பின் அவ்வொளி கதிரவனது ஒளி என்பது உண்மையல்ல என்ற எண்ணம் அந்த நிமிஷமே மனதில் உதிக்கின்றது. மற்று, இம்மை வாழ்க்கைக்கு வேண்டிய ஓர் அற்பமான செயற்கைஒளி என்றே அதனை எண்ண வேண்டும். ஏனெனில் கதிரவனதுவிஸ்தாரமானஒளி நமது சிரத்தின்மீது மழைபோலத் தானே சொரிந்துகொண்டிருக்கும்; சிறிய ஒளியோ நமக்கு வெளிச்சம் காட்டுவதற்கு வேறு அநேக உபகரணங்களின்உதவியை வேண்டிநிற்கின்றது.

கதிரவன் பேரொளி எத்தன்மையுடையதோ அத்தன்மையேபோன்றது தருமம். அது பெருவாரியானதும், எளிதில் அறிந்துகொள்ளக்கூடியதுமேயாகும். தருமமாவது ஈசுவரன் தன்னையே கொடுக்கும் கொடை. இத்தருமமோ, நித்தியமானது, மாட்சிமையுடையது, நம்மைச் சுற்றிநின்று நமது உள்ளும் புறமும் ஒன்றாக இழையும்படி நெய்து அசைவின்றி அமர்ந்திருக்கின்றது. தருமத்தை அடையவேண்டுமென்று உண்மையாக விரும்பும் இதயத்தின் உற்சாகத்தினால் அதை அடையக்கூடும். ஆகாயம் முழுவதும் நிறைந்துள சூரிய வெளிச்சத்தை நம்முடைய பிரயாசையின் மூலமாகவே பெற்றுக்கொள்ளவேண்டுமென்று இருந்தால் அக்கதிரவன் ஒளியை நாம் அடைவதென்பது இயலாததாகிவிடும். அப்படியே, நம்முடைய அழிவற்ற ஜீவனுக்கு ஆதாரமாயிருக்கின்ற தர்மத்தை விசேஷமான எத்தனத்தின் மூலமாகப் பெற்றுக்கொள்ள வேண்டுமேயாகில் எக்காலத்திலும் அது கைகூடவே மாட்டாது. நம்முடைய சுயபுத்தியினால் எதை உண்டாக்குகின்றோமோ, அது, பலவித சிக்கு உடையதாக இருக்கின்றது. நம்முடைய சமூகமும் சம்ஸ்காரமும், ஜீவன் யாத்திரையும் சிக்குள்ளன. இச்சிக்கானது பல பாகங்களாகப் பிரிந்த தனது விசித்திரத்தின்மூலமாக விபுலத்தினுள் பலவகைப் பாவனைகாட்டி நமது அறிவற்ற மனதை மேற்கொள்கின்றது. தத்துவ ஞானத்தைப் போதிக்கும் எந்தப் புத்தகம் கடினமாகிய சிக்குள்ள பாஷையில் எழுதப்பட்டிருக்கின்றதோ, அதனிடையே நம்முடைய அறியாமையுள்ள மனமானது அதன் பாண்டித்தியத்தைக் கண்டு பிரமிக்கின்றது. எந்த நாகரிகத்தின் முன்னேற்றத்தின் பாதை கஷ்டமானதோ, எதன்உபகரணங்களும் இயந்திரங்களும் மிகவும் விஸ்தாரமானவைகளோ அந்த நாகரிகம் நம் மனத்தைத் திகைக்கச் செய்கின்றது. தத்துவஞானத்தை எளியவகையில் நமக்கு விளக்கிக் காட்டக்கூடிய ஆசிரியனே நிபுணன்; அவனே சக்திமான். தனக்குரிய எல்லாக்காரியங்களையும் இயற்கையான ஒழுங்கினால் எங்கும் நடைபெறச்செய்கின்றநாகரிகமே மேன்மையானது. வெளிப்பார்வைக்கு எப்படி இருந்தபோதிலும் சிக்குள்ளநாகரிகம்பலவீனமுடையது, அனுகூலமுமற்றது. சம்பூரணமுடையதே இயற்கை நிலையில் இருப்பதாம். பரிபூரணம் இயற்கை என்னும் அவ்விரண்டும் தருமத்தின் ஒரே பார்வை.

இவ்வாறாக, மனிதனே இத்தகையதர்மத்தைச் சம்ஸ்காரத்தின் நானாவகை முட்கள் போன்ற தொல்லைகளினால் நிரப்பியிருக்கின்றான்; இதுவே நம்முடைய துர்பாக்கியம். முடிவற்ற தந்திரம், மந்திரம், போலிக் கிரியைகள், கர்மங்கள், வேறுபாடான கொள்கைகள் விசித்திரமான மனோபாவனைகள் ஆகியவைகளால் மனிதர், தர்மத்தின்பாதையைச் சங்கடங்களுக்குள்ளாக்கியிருக்கின்றனர். இவ்விதம் மனிதன் தானே உண்டாக்கிக்கொண்ட இருள்நிறைந்த நியமங்களின் நடுவில், துணிவுடைய புருஷர்கள் சிலர் காலாகாலங்களில் தோன்றிப் புதிய பாதைகளை வெட்டித் திறந்து புதிய புதிய சம்பிரதாயங்களை ஏற்படுத்தி யிருக்கின்றனர். இவ்வண்ணம் உண்டாக்கப்பட்ட வித்தியாசமான சம்பிரதாயங்களுக்கு உரிய கொள்கைகளின் வேறுபாடே இவ்வுலகில், சண்டை, முடிவற்ற விரோதம், வித்தியாசம், ஆறுதலின்மை, அதர்மம் அனையவைகளைப் பிறப்பித்தது.

இப்படி நேரிட்டதற்குக் காரணம் என்ன? முழுமனதுடனும் நாமே தர்மத்தின்படி நடக்காமல் அதற்கு மாறாகத் தருமத்தை நம்முடைய நடைபோலாக்கிக்கொள்ளப் பிரயாசைப்பட்டதே இந்த நிலையில் நாமிருப்பதற்குக் காரணமாமன்றி வேறு இல்லை. செடிகளைக் காலாகாலங்களில் அழகுபட வெட்டி வளர்ப்பதைப்போல், நாம், தருமத்தையும் இவ் வுலக வாழ்க்கைக்குரிய விவகாரங்களில் ஒன்றாகக் கருதி அத்தருமத்தை நம்முடைய பரிமாணத்திற்குத் தக்கபடி செய்துகொண்டதால் பெற்றபேறே இப்போது நேரிட்டிருக்கும் இந்நிலை.

எல்லாவற்றிற்கும்முதலாக நமக்குவேண்டியது தர்மமே யென்பதைப்பற்றிச் சந்தேகமே இல்லை. மற்று, தர்மத்தை நம்முடைய் இம்மை வாழ்க்கைக்கு உபயோகமான பலவற்றுள் ஒன்றாக ஆக்கிக்கொள்வோமேயாகில், எதன்பொருட்டு நமக்கு அது மிகவும் அவசியமாகவேண்டியிருக்கின்றதோ அது உடனே நஷ்

டமடைகின்றது. தர்மமானது, தேசம் காலம் பாத்திரம் ஆகிய அற்பமான வகுப்புகளுக்கு மேலானது, வர்ணமற்றது, மாறுதலற்றது; ஆதலினால் அது எந்த நிலையிலும் நமக்கு நிரந்தரமான அவசியமாகி இருக்கின்றது. நமக்குள் அடங்கி இராமல் நம்மினின்றும் புறமான தொன்றாகத் தருமம் என்பது இருக்கிறபடியினால்,எக்காலத்திலும், நாம் அடைகின்ற பல மாறுதல்களினிடையேயும் அது மாறாததோர் தஞ்சமாய் நின்று நமக்கு உதவுகின்றது.

இப்படியிருக்க, தருமத்திற்கு ஒரு ரூபத்தை நாம் உண்டுபண்ணிக்கொள்ளவே வேண்டும் என்பார்கள். அப்படி உண்டுபண்ணும்போது நாம் நம்முடைய சுபாவத்தைப் போன்ற வோர் ரூபமே அதற்குக் கொடுக்கின்றோம். மனித சுபாவமோ விசித்திரமானது; ஆதலால், ஒன்றேயாகிய அத்தருமம் இவ்விசித்திரத்தின்படி அனேகமாகப் பிரிக்கப்படுகின்றது. விசித்திரம் இருக்கின்ற இடத்தில் சிக்குப்பாடுகளும் இருக்கவே இருக்கும். சிக்குப்பாடுகள் எங்கே உண்டோ அங்கே விரோதங்கள் தன்னாலேயே நேரிடும். மற்று; தர்மத்திற்கோ ஒரு ரூபத்தை உண்டுபண்ணவேண்டியதே இல்லையே. தர்மராஜாவாகிய ஈசுவரன், ரூபத்துக்கு மேலானவர். எவ்வண்ணம் அவரை நாம் ரூபிக்கின்றோமோ அவர் அது போன்றவ ரல்லர், அதனினும் வேறாகிய ஒன்றாகவே இருப்பார். அப்படியே நாம் தருமத்திற்கு ஒரு ரூபம் கொடுத்துவிட்டால் பிறகு அது தர்மமே அல்லாததாகிவிடுகின்றது, பின்னர் ஸம்ஸ்காரம்தான் அது. ஆகையினால், விசித்திரம் விநோதம் அனைய ஸம்ஸ்காரத்தின் எல்லாக் குணங்களும் அதனில் காணப்படுகின்றன. ஒன்றிற்கு நாம் ஒரு ரூபத்தைக் கொடுத்துவிட்டவுடன் நாம் ஒருவாறு திருப்தியடைகின்றோம். ஆயினும், ஒரு தத்துவத்திற்கு நாம் ஒரு ரூபத்தைக் கொடுத்துவிடுவோமானால், பிறகு, அதனால் அத்தத்துவம் ஒவ்வொரு நிமிஷமும் பழுது அடைந்தவண்ணமே இருக்கின்றது. ஒன்றிற்கு ஒரு ரூபத்தைச் செய்துகொடுக்கப் பிரயாசைப்படுவதெல்லாம் அதனால் நாம் சுகம் அடைவோம் என்றபொய் நம்பிக்கையின்பொருட்டே; ஆனாலோ எதற்கு ரூபத்தைச்செய்துகொள்ளுகின்றோமோ அதன்மூலம் நம்முடைய இம்மை வாழ்வில் ஏதோ ஒருவாறு இரம்மியம் ஏற்படலாம்;எனினும், இந்த மனோரம்மியந்தான், உண்மையான சுகம் என்று எண்ணலாகாது. பெரியதோர் தத்துவத்திற்கு ஒருஉருவம்கொடுத்துவிடுவோமானால், உடனே அது சிறுமை அடைந்துவிடுகின்றதென்பதிற் சந்தேகம் இல்லை.

"பூமைவ சுகம், நால்பே சுகமஸ்தி"
[பெரியதிலேயே சுகம், சிறியதில் சுகம் இல்லை]

என்று உபநிடதம் கூறும்.

அத்தகைய மகத்தான தொன்றை, நாம் செய்து வைக்கும் ரூபமாகியபாத்திரத்தினுள் அடக்கும்வண்ணம் சிறியதாக்கிவிடுவோமானால் அது பின் துக்கத்தையே விளைவிக்கும். பின், தருமமானது நம்மைத் துக்கத்திலிருந்து எப்படித் தப்புவிக்கக்கூடும்? ஆதலால், ஸம்ஸ்க்காரமாகிய இம்மை வாழ்க்கையிலேயே மகத்தானநிலையை ரூபிக்கவேண்டுமேயன்றி, இம்மை வாழ்க்கையின்பொருட்டு அம் மகத்தான ஒரு தனி நிலையைத் துண்டு துண்டாகச் சிதைத்து அற்பமாக்குவது நேரன்று.

இதற்கு ஓர் உதாரணம் கொடுக்கின்றேன். நம்முடைய வீடானது நமக்குப் பிரயோசனமுள்ளது, அதுவே நாம் வாசம் செய்வதற்கு யோக்கியமானது; வெளியான ஆகாசம் அவ்வண்ணம் நாம் வாசம் செய்வதற்கு ஏற்றதன்று. ஆயினும் இவ்வெளியான ஆகாசத்தை முற்றிலும் அடைக்காமல் வைப்பதும் அவசியமே. வீட்டினுள் இருக்கும்ஆகாசம் வெளியான ஆகாசத்துடன் இடைவிடாத போக்குவரவுள்ள ஒற்றுமைகொண்டிருக்குமானால்தான்,வீடானது நமக்கு மறியற் சாலையாகவும், பிரேதக் குழியாகவும் அமையாமல் தப்பும். வீட்டைப் போல ஆகாசத்தையும் நமக்குச் சொந்தமாக்கிக்கொள்வோம் என்றுசொல்லி ஆகாசத்தின் இடையே நாம்சுவர்களைக் கட்டினவண்ணமே இருப்போமாயின் நம்முடைய வீடு விஸ்தாரமடைந்தவண்ணமே பெருகுமானாலும் தூரத்திலிருக்கும் வெளியான ஆகாசமோ இன்னும் தூரமே ஆகிவிடும். விஸ்தாரமான கூரையைக்கட்டுவதால்ஆகாசமுழுவதையும் நமக்குச் சொந்தம் ஆக்கிக்கொண்டோம் என்று உத்தேசிக்கின்றோம்; ஆனால், ஒளியின் ஜன்மபூமியும், பூர்புவ: ஸ்வர்க்க லோகத்தின் அந்தமற்ற கிரீடைக்கு க்ஷேத்திரமும் ஆகிய ஆகாசத்தின்கண் நம்மையே வஞ்சித்துக்கொள்கிறோம். எளிதில் எவைகளைப் பெற்றுக்கொள்ளக் கூடுமோ, இலகுவாயன்றி வேறெவ்வித உபாயத்தினாலும் எவைகளைப்பெற்றுக்கொள்ள லாகாதோ, அவைகளைப் பெற்றுக்கொள்ளும்படி நாம்செய்யும் பிரயத்தனத்தினா லவைகள் கிடைப்பது துர்லபமாகிவிடுகின்றது. இம்மைவாழ்வுக்கு வேண்டியதாகிய மற்றையபொருள்கள் யாவற்றையும் வேலி அடைத்து நம்முடையதாக்கலாம்; தர்மத்தை மாத்திரம் அவ்வண்ணம் பெற்றுக்கொள்ள இயலாது. வேலியை வெட்டித் திறந்தால் அன்றி ஆதி ஈசுவரனை அடைய இயல்வதில்லை. உண்மையாகவே அப்படி அடைவோமாயின் ஆனந்தத்தின் அதிகாரிகளாகிய நாம், வேறு வகையாக அடைவதற்கு வீணில் படும் பிரயாசைகளால் தோல்வியே அடைவோம்.

"பதோ வாசோ நிவர்த் தந்தோ அப்ராப்ய
மநஸா ஸஹ
ஆநந்தம் ப்ரம்மஹ்ணோ வித்வான்
நபிபேதி குதஷ்சன

மனதும் வாக்கும் எட்டி அடையாதது ப்ரஹ்ம்மம்; அப் பிரஹ்ம்மத்தின் ஆனந்தத்தை அனுபவித்தவன் ஒன்றிற்கும் பயப்படமாட்டான். (தொடரும்)

திருக்குறள் மூலமும் சொற்குறிப் பகராதியும்.

வா. மார்க்கசகாயம் செட்டியார் பதிப்பு

சிற்றடக்கமான இப்பதிப்பில் அட்டவணைக்குமாத்திரம் 300 பக்கங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. திருக்குறளைப் படித்து ஆராய விரும்புவார்க்கு இவ்வட்டவணை மிகவும் உபயோகமாயிருக்கும். ஒப்புக்குறள்களையும் தொகுத்துப் பதிப்பாசிரியர் அளித்திருப்பது மிகவும் பயனுடையதாம். பயிலப்பயில இப்பதிப்பின் பெருமையும் அருமையுந் தெரியவரும். விலை—அணா 12. தபால் செலவு வேறு.

கலாநிலயம், புரசை, சென்னை.

"எது வேண்டும்"

(ஒரு சிறு கதை)

அச்சுயந்திரம்இருப்பதைத் தங்களுக்குச் சாதகமாக்கொண்டு,புற்றீசல்போலஓயாமல்வெளிவந்துகொண்டிருக்கின்ற "நாவல்கள்" என்னும் தற்காலக் கற்பனைக் கதைகளைப் படிப்பதென்றால் எனக்கு விளக்கெண்ணெய்உட்கொள்வதுபோலிருக்கும்.அப்பொழுது அருவருப்பாக இருந்தாலும் பின்னால் சுகம் உண்டாவதைக்கருதிஅதனை முகம்சுளிக்காமல் சாப்பிட்டுவிடலாம். நாவல் என்றாலோ எனக்கு ஆசையே தோன்றுவதில்லை. புதிதாக ஒரு நூல் எழுதத்தொடங்கினால் முதலில் கடவுள்வணக்கம் குருவணக்கம் செய்து,மங்களமான சொல்லை முதலில்வைத்துஆரம்பித்து எழுதவேண்டுமே; அவற்றை யெல்லாம் கவனிப்பதில்லை."கொலை! கொலை!" "ஐயோ,என்ன விபரீதம்!" என்பனபோன்ற அமங்கலச் சொற்களையே தேடித் தேடி முதலில் எழுதுகிறார்கள். ஏன் இப்படி எழுதுகிறார்களென்றால், படிப்பவர்கள் அப்பொழுதுதான் "என்னவாயிற்று,என்னவாயிற்று" என்று ஆசையும் வியப்பும் மிகுந்தவர்களாய் எடுத்த புஸ்தகத்தைப் படித்துமுடித்தபிறகுதான் கீழே வைப்பார்களாம். இங்ஙனம்தம்முழுக்கவனத்தையும் செலுத்திப் பக்கம்பக்கமாகப் புரட்டிப்படித்து முடித்த நாவல்பிரியர்களைப் பார்த்து,"அங்ஙனம் படித்ததால் உங்களுக்கு என்னவாயிற்று?" என்றுதான் நானும் கேட்பது வழக்கம். அதற்குப் பதில் கூற வகையில்லை. எனக்குமட்டும்,விலங்குகளும் பறவைகளும்,மற்று, மலையும்கடலுங்கூடப் பேசினதாகச் சொல்கிறார்களே, அத்தை பாட்டி கதை,அவைகளென்றால்தான் உற்சாகம்பிறக்கின்றது; பொழுது போவதேதெரியாது."ஒரானொருகாலத்தில் சண்பகாடவியென்னும்ஆரண்யத்தில் சஞ்சீவகன்என்றொரு நரி இருந்தது"என்றாவது,"முன்னொரு காலத்தில் ஒரேஒரு ராஜா இருந்தான்; அவனுக்கு நான்கு பிள்ளைகள் ; மூத்தவன் யுக்தி யோசனைகளில் சிறந்தவன் ; அடுத்தவன் வில்வித்தைகளில் கெட்டிக்காரன்; மூன்றாமவன் கொடுக்கல் வாங்கலில் வல்லவன் ; எல்லாருக்கும் இளையவன் காரியவாதி" என்றாவது, "விக்கிரமபுரம் என்னும் பட்டினத்தில் விக்கிரம சிங்கன் என்று ஒரு அரசன் இருந்தான். அவனுக்குச் சந்ததி இல்லாமையால் காடு செடி மலை வனம் வனாந்தரங்களெல்லாம் தாண்டி ஒரு பெரிய ஆரண்யத்தின் நடுவில் பார்வதிபரமசிவனைப் பார்த்து அகோர தவங்கள் செய்து ஒரு பெண்பிள்ளையைப் பெற்றான்; அப்பெண்ணிற்கு விக்ரமோர்வசி யென்று பெயர்" என்றாவது தொடங்கும் கதைகளையே நான்பெரிது விரும்புகின்றேன்.

நான் சிலநாட்களுக்குமுன் எனதுநண்பர் ஒருவர் வீட்டிற்குச் சென்றிருந்தேன்.அவர் வீட்டில்சில கண்ணாடிபீரோக்களில் கண்ணைக்கவரும்வனப்புவாய்ந்த அழகிய பல புத்தகங்கள் வரிசைவரிசையாக அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. எனதுநிலைமைதான் உங்களுக்குநன்றாகத்தெரியுமே;மதுரமான கனிகள்பல விருப்பினும் அவற்றைவிடுத்து வேப்பம்பழத்தை விரும்பும் காக்கைபோல, பீரோவில் உள்ள புத்தகங்களை விட்டு, அவ்வீட்டின் ஓர் மூலையில் பழைய துணியில் கட்டித் தொங்கவிட்டிருந்த ஒரு சிறிய மூட்டைமீது எனது பார்வை சென்றது. "அன்பரே, அது என்ன துணிமூட்டை?" என்று என் தோழரை ஆர்வமுடன் வினவினேன். "அதுவா, அது பழைய சில பனைஓலைச் சுவடிகளும்,கந்தலான ஏதோ சில புத்தகங்களும் கட்டப்பட்டிருக்கின்றது" என்றார் அவர். நான் உள்ளம் பூரித்தவனாய் அதைப் பிரித்துப்பார்ப்பதற்கு விரைந்து சென்றேன். "ஜாக்கிரதை, வருஷத்திற்கு ஒருமுறை சரஸ்வதிபூஜையன்றைக்குங்கூட அதை யவிழ்ப்பதில்லை; தேள் முதலிய விஷ ஜந்துக்கள் இருக்கும். பார்த்து எடுங்கள்" என்றார். என்ன வியப்பு! என் தோழர் வாய்க்குச் சர்க்கரை போடவேண்டும்; அம் மூட்டையருகில் சென்றேனோ இல்லையோ அதனுள் "சரசர சரசர" என்றசப்தம் கேட்டது. அவ்வீட்டிலிருந்த ஒரு குறுந்தடியைக் கையிற்பிடித்துக்கொண்டு அதனால் அச்சிறு மூட்டையை மெதுவாகப் பிரித்தேன். ஓலைச்சுவடிகளில் சிலவற்றையும் காகிதப் புத்தகங்களில் சிலவற்றையும் கறையான் மிக அமைதியாகச்சுவைபார்த்துக்கொண்டிருந்தது. கையிலிருந்த கழியைக் கீழே எறிந்துவிட்டு, செல்லரித்தன போக எஞ்சியவற்றைத் தட்டியெடுத்து, முதலில் ஓலைச் சுவடிகள் என்னவென்று பார்த்தேன். எல்லாம் தமிழ்ச் சுவடிகள்தான் என்று எனது நண்பர் சொன்னார். ஆனால் எனக்குமட்டும் அவ்வெழுத்துக்கள் கன்னடமோ மலையாளமோ மற்றுவேறு எந்தப்பாஷையின் எழுத்துக்களாகவோ இருந்தால் இருக்கலா மல்லது தமிழ் எழுத்துக்கள் மட்டும் அல்லவென்பது உறுதி. காகிதப்புத்தகங்களை எடுத்துப்பார்த்தேன்.அவற்றுள் முன்னும் பின்னும் சில ஏடுகள் கிழிந்திருந்த ஒரு புத்தகத்தின் மீது என் சிந்தை விரைந்து சென்றது. அதனையெடுத்துச்சில வரிகளைப் படித்தேன். என் மனதுக் கேற்ற கதை! அதைக் காட்டி, "நண்பரே, படித்தபின்பு இப்புஸ்தகத்தை உங்களிடம் சேர்ப்பித்துவிடுகின்றேன்" என்றேன். "வேண்டவே வேண்டாம், நீங்களே எடுத்துக்கொள்ளுங்கள்" என்றார் நண்பர். அவர் தாராள சிந்தையை மெச்சி, அப்புஸ்தகத்தோடு என் இருப்பிடம் வந்து அதனைச் சாவகாசமாய்ப் படித்தேன். முன்னும் பின்னும் சில பக்கங்கள் இல்லாவிட்டாலும் கதை ஏதோ ஒரு மாதிரியாக இருந்தது. அந்தப் புஸ்தகம் கெட்டுப்போகாமல் இருக்க வேண்டி அதைப்பார்த்து வேறு ஒரு பிரதி யெழுதினேன். அந்தப் பிரதி என்னிடத்தில் மட்டுமன்றிப் பலரிடத்திலும் இருப்பின் நல்லது என்று நினைத்து இப்பத்திரிகைக்கு அனுப்பி யிருக்கின்றேன். ஆசிரியரவர்கள் தயைகூர்ந்து பிரசுரிப்பாராக.

* * *

"நல்ல நிலவு; அந்த ஊருக்கடுத்த பரந்த மைதானத்தில் சிறுவர்கள்முதல் பெரியவர்கள் வரை 'பலீன்குடுகுடு' ஆடிக்கொண்டிருந்தார்கள். ஒரு சிறுவன் மட்டும் தனியே உட்கார்ந்து தேம்பித் தேம்பி அழுதுகொண்டிருந்தான். தாவள்யமாக வீசும் அச்சந்திரிகையைக் காட்டிலும் வெள்ளை வெளேரென நரைத்து நீண்ட தாடி மீசையுடைய ஒரு கிழவர் அச்சிறுவனிடம் வந்து, "தம்பி, ஏன் அழுகிறாய்?" என்று கேட்டார். "என்னை இவர்கள் விளையாட்டில் சேர்த்துக்

கொள்ளமாட்டேனென்கிறார்கள்" என்று சொல்லி அழுதான். "இதற்காகவா அழுகின்றாய்? அழாதே, அழாதே; நான் ஒரு சாமான் தருகின்றேன். அதை வைத்துக்கொண்டு நீ தனியே விளையாடலாம்; வேறு ஒருவரும் தேவையில்லை. வருகிறாயா தருகின்றேன்" என்றார். சிறுவன் தன் சம்மதத்திற்கு அறிகுறியாகத் தலையை அசைத்தான். பெரியவர் அவ்விளைஞனைத் தன்னுடனழைத்துக்கொண்டு அவ்வூருக்கு வடக்கே ஒரு கொடிப்பாதையில் நடந்து சென்றார்.

சிறுவன் கொஞ்சதூரம் போனதும் நடக்கவியலாது தடுமாறினன். பெரியவர் அதனையறிந்து "தம்பி, அதோ பார், மாசுமறுவற்ற ஆகாயத்தில் பூர்ணசந்திரன் உனக்கு இனிமேல் வரப்போகும் அதிர்ஷ்டத்தையறிந்து சந்தோஷப்படுகிறான். உன்னை விளையாட்டில் சேர்த்துக்கொள்ளாத சிறுவர்கள் நீ அதிர்ஷ்டசாலியானபின்பு உன்னைக் கண்டதும் பொறாமையால் எப்படிப் பதுங்கிப் பதுங்கிப் பார்ப்பார்களோ அப்படி ஆயிரக்கணக்கான நக்ஷத்திரங்கள் மறைந்து மறைந்து தோன்றுகின்றன பார்! தென்றல் எவ்வளவு மனோகரமாக வீசுகின்றது; சலிப்படையாதே; நாம் போகவேண்டிய இடம் அதிகதூரமில்லை" என்று சொல்லிச் சிறுவன் தன்னைத் தொடர்ந்துவர முன்னே சென்றார். அவனும் தனக்கு அம்முதியவர் தருவதாகச்சொன்ன விளையாட்டுக்கருவி எப்படிப்பட்டதோ பார்ப்போமென்னும் ஆசையால் கால் வலியையும் பாராது சென்றுகொண்டிருந்தான். ஊருக்கு அடுத்த தோப்பு துரவு வயல் முதலிய எல்லாம் கடந்து, அந்த வெள்ளிய நிலவொளியிலும் கண்ணிற் கெட்டியவரை ஒரே பசுமையாய்க் காட்சியளிக்கும் பசும்புற் பிரதேசத்தை யடைந்தார்கள். அங்கங்கே முட்புதர்களும் குத்துச்செடிகளுந் தவிர வேறு பெரிய மரங்கள் அந்தக் காட்டில் இல்லை. பூர்ணசந்திரன் தலைக்குமேல் உச்சியில் பிரகாசித்துக்கொண்டிருக்கிறான். பகற்பொழுதில் ஆடுமேய்க்கும் கிழவர்களும் மாடுமேய்க்கும் சிறுவர்களும் வேறு மனிதர்களுமாகக் கதையும் ஆட்டமும் நிறைந்திருக்கும் அப்பிரதேசம் அந்த நள்ளிரவில் நிர்மானுஷ்யமாக விருந்தது. நெடுந்தூரத்திலே நண்டுகளையும் புழு பூச்சிகளையும் பிடித்துத் தின்னும் நரிகளின் ஓலமும், காய்ந்துபோன மொட்டைமரங்களின் மீதிருந்து கூப்பிடும் கோட்டான்களின் பயங்கர ஒலியும், ஆந்தையின் அலறலும் தவிர வேறு சப்தமில்லை. அச்சிறுவனின் தலைக்குமேல் ஒருமுழ உயரத்தில் ஒரு வௌவால்சிறகடித்துச்சென்றபோது உற்சாகத்தோடு சென்றுகொண்டிருந்த சிறுவனுக்கு அச்சமிகுந்தது. அங்கங்கேயுள்ள முட்புதர்கள் கரும்பேய் தலைவிரித்து உட்கார்ந்திருப்பனபோலச்சத்தால் மருண்ட அவன் கண்களுக்குப் புலனாயின. அதற்குமேல் அச்சிறுவன் அடி எடுத்துவைக்காமல் அங்கேயே நின்றுகொண்டு, "ஐயா, இனிமேல் என்னால் நடக்க முடியாது. நெடுந்தூரம் வந்துவிட்டோம். நேரஞ்சென்று வீட்டிற்குப் போனால் எனது பெற்றோர்கள் இவ்வளவுநேரமாவிளையாடிக்கொண்டிருந்தாய், என்று அடிப்பார்கள். திரும்பி வீட்டிற்குப் போகலாமென்றாலும் தனியே போவதற்குப் பயமாக இருக்கிறது. என்னை வீட்டிற்குக் கொண்டுபோய் விட்டுவிடுங்கள்; உங்களுக்குக் கோடி புண்ணியமுண்டு. பிரியமிருந்தால் நீங்கள் எனக்குக் கொடுக்க விரும்புகிற சாமானை இன்னொரு நாளைக்கு எனது ஊரில் என்னிடம் கொண்டுவந்து கொடுங்கள்" என்று தழுதழுத்த குரலினோடு கூறினன். பெரியவர் அவனைத் தட்டிக்கொடுத்து, "தம்பி, பயப்படாதே; நான் கொடுப்பதை நீ உன் பெற்றோர்களிடம் கொண்டுபோய்க் காட்டினால் அவர்கள் எவ்வளவோ சந்தோஷப்படுவார்கள். இவ்வளவு தூரம் உன்னோடு பேசிக்கொண்டுவந்தும்ஒன்றைக் கேட்க மறந்துவிட்டேனே; உன் பெயர் என்ன?' என்றார்.

"பெயரா, என் பெயர் முருகன்"

"ஆகா, நல்ல பெயர், உன் வடிவுக்கேற்ற பெயர்; முருகா, அருகில் தெரிகிறதே சோலை, அந்தச்சோலைக்கு அருகில் ஒரு குன்றுதெரிகிறதோ இல்லையோபார்; அதுதான் நாம் இப்பொழுதுபோகவேண்டிய இடம்; மிக்க சமீபத்தில் இருக்கின்றது. நான் கொடுப்பதை நீ பெற்றுக்கொண்டால்மட்டும் போதாது; அதை வைத்துக்கொண்டு எப்படி விளையாடுவது என்பதையும் அறிந்துகொள்ளவேண்டும்; அதற்காகத்தான் உன்னை எனது இருப்பிடத்திற்கு அழைத்துப் போகின்றேன்; வேறுவிதமாக ஒன்றும் பயப்படவேண்டாம்" என்று கூறி அச்சிறுவன் கையைப்பிடித்துக்கொண்டு நடந்தார் பெரியவர். அவர் கொடுக்கவிருப்பது எத்தகையதோ என்றஎண்ணமே குடிகொள்ள வழிநடைத்துயரையும் மறந்து சென்றான் சிறுவன். இருவரும் அப்பெரிய சோலையை அடைந்தனர். கோங்கு வேங்கை தேக்கு முதலிய மரங்கள் வானத்தை முத்தமிடுவனபோல் ஓங்கி வளர்ந்து காற்றினால் அசைந்தாடுகின்றன. அருவி நீரின் சிற்றொலியும், காற்றினால் அரசு முதலிய மரங்களின் "சலசலப்"பும், மா பலா முதலிய கனிகள், வனப்புமிக்க பல நிறமுடைய மலர்கள் இவற்றின் மிக இனிய வாசனையும் அந்நள்ளிரவிலும் மனதிற்கு ரம்யம்தருவனவாயிருந்தன. பூர்ண சந்திரனே நன்றாகப் பிரகாசித்துக்கொண்டிருந்தபோதிலும் பகலிலும்இருள்தரும் அச்சோலை அந்த அர்த்த ராத்திரியில்ஒரே இருட்டாக இருந்தது. எனினுமுதியவர் தங்குதடையின்றி அச்சோலையினூடே சிறுவன் கையையைப் பிடித்தவண்ணம் நடந்து சென்றார். என்ன அற்புதம்! என்ன அழகு! அண்ட முகட்டிற்குச் சுவரெழுப்பியதுபோல என்று புலவர்கள் சில சமயம் வர்ணிக்கிறார்களே, அவ்வர்ணனை இதற்குத்தான் தகும். பிரம்மாண்டமான மலை ஒன்று ஆகாயமளாவி நின்று, சுந்தராங்கியான பூமிதேவிக்கு மரகதங்களாற் செய்த மணிமகுடம்போல்விளங்குகின்றது. அம்மரகத மணிக்கிரீடத்தின் உச்சியில் பதித்துள்ள ஒரு ஒளிமிகுந்த வைரம்போல் சந்திரன் ஜாஜ்வல்யமாகப் பிரகாசிக்கிறான். அவ்வைரத்தின் ஒளித்தாரைகள்போல் அம்மலையில் நாற்புறத்திலும் அருவிகள் சோபிக்கின்றன. அவ்விருவரும் அம்மலையடிவாரத்தை யடைந்தவுடன், கிழவர் அச்சிறுவனைப் பார்த்து. "முருகா, நான் குறிப்பிட்ட இடம் இதுதான்" என்று கூறித் தான்மட்டும் அங்கு இருந்த ஓர் பெரும் பாறையின் மீது ஏறி நின்றார். சிவந்த நிறமும் நரைத்து நீண்ட தாடி தலைமயிரும் உடைய அப்பெரியவர் அவ்வெள்ளிய சந்திரிகையில் வெண்மை நிறம் வாய்ந்த கைலையங்கிரியினின்று இறங்கி வந்து காட்சியளிக்கும் பரமசிவனைப்போல் விளங்கினார். "முருகா, இதோ பார்" என்று தன் இரண்டு கைகளையும் உலுக்கினார். அவர் கரங்கள் இரண்டிலும் இரண்டு பெரிய கோணிப்பைகள் இருந்தன. ஒன்று பெரியது, மற்றொன்று சிறியது. "தம்பி, இவ்விரண்டு பைகளிலும் விளையாட்டுப் பொருள்கள் நிறைய இருக்கின்றன; உனக்கு எது வேண்டும்?" என்றார். சிறுவன் அந்தப் பெரிய பையைக்காட்டி "அதுதான் வேண்டும்" என்றான். "மகனே, வாழ்ந்தாய்," என்று இரு கரங்களாலும் அவனைத் தழுவி வாழ்த்தினார். பின்பு அப்பெரிய பையை அவிழ்த்தார். அவ்வளவும் ஓலைச்சுவடிகள்! சிறுவன் மனம் "பொக்"கென்று போய்விட்டது. "இதற்காகவா என்னை இவ்வளவு தூரம் அழைத்து வந்தீர்கள்? என்று சலிப்போடு கேட்டான். "நீ இதன் அருமையைப் பின்பு அறிவாய்" என்று கூறி உருண்டு திரண்டு ஒரே வழுக்கலாக இருந்த அந்தப் பெரிய பாறைக்கு நேரே தனது வலது கரத்தை உயர்த்தினார். அவ்வளவில் அந்தப்பெரிய கல் இரண்டு பிளவாக விரிந்தது. இருவர் ஒரு சேர நடந்துபோதற்கு வேண்டிய வழி அப்பிரிவினிடையே காணப்பட்டது. "முருகா, இச்சுவடி மூட்டையை எடுத்துக் கொண்டு வா; உன்னைப் போன்ற சிறுவர்கள் பலர் இத்தகைய சுவடிகளை வைத்துக்கொண்டு விளையாடும் விநோதத்தைக் காண்பிக்கின்றேன்" என்றார் பெரியவர். "ஐயோ, என்னை உயிரோடு விட்டுவிடுங்கள்; நான் மட்டும் இந்தக் குகைக்குள் வரமாட்டேன்" என்று கூறிக் கெஞ்சினன் சிறுவன். "முருகா, நீ கள்ளங் கபடற்ற பச்சைக் குழந்தையென்பது உன் சொல்லே காட்டுகிறது; உன்னை நான் எதற்காகக் கொல்லவேண்டும்? அப்படிக் கொல்வதாயிருந்தால் ஊர் தாண்டியதுமே கொன்றிருக்கமாட்டேனா? சுவடிகளை நானே எடுத்து வருகிறேன்; என்னோடுவா" என்று அவன்கையைப்பிடித்துக்கொண்டு குகையில் இறங்கினார். குகைவழி ஒரே இருட்டாக இருந்தது. சிறுவன் முதற்படியில் நின்றவண்ணமே "ஐயா, எனக்குப் பயமாக இருக்கின்றது. இருட்டில் காலெடுத்து வைக்க முடியவில்லை" என்றான். பெரியவர் குகையில் இருந்தவண்ணமே அப்பாறைப் பக்கம் திரும்பி, தனது வலது கரத்தை உயர்த்தினார். ஆ! பிளவுபட்டிருந்த பாறை ஒன்றாகப் பொருந்திக்கொண்டது! பாறை பிளவுபட்டிருந்த சமயத்தில், முழுக்கலாமதி தன் பூர்ணகலைகளோடு ஜ்வலிக்கவும் இருட்டாக இருந்த அக்குகைவழி அப்பெருங்கல் மூடியவளவில் ஒரே ஜோதியாக விளங்கிற்று. கோடி சூரியப் பிரகாசம் என்று சிலர் கற்பனை செய்கின்றார்களே அது இவ்வொளிக்குத்தான் தகும். தெய்வீக ஒளி, எங்கும் ஜோதிமயம். அப்பொழுது சிறுவன் முகத்தைப் பார்க்கவேண்டுமே. ஆனந்தம் பொங்குகிறது; இதழ்களில் புன்னகை தவழ்கின்றது. அச்சத்தின் அறிகுறியே அவனிடம் காண்பதற்கில்லை. "ஐயா அந்தச்சுமையை என்னிடமினிக் கொடுத்துவிடுங்கள்; நான் சும்மா வர நீங்கள் சுமந்துவரல் தருமமன்று" என்றான். பெரியவர் சுவடிச் சுமையை அவனிடம் கொடுத்துவிட்டார். சிறிது தூரம் இருவரும் அப்படிவழியே சென்று ஓர் பெரிய பூங்காவை யடைந்தனர். நாம்இங்குக் காண்பதுபோல் பருவவேற்றுமை அங்கே யில்லை. வெவ்வேறு காலத்தில் மலர்தற்குரிய புஷ்பங்களனைத்தும் ஒரு சேர அச்சோலையில் மலர்ந்திருந்தன. வண்டுகளின் உற்சாகத்தைச் சொல்லவும் வேண்டுமா? மனதைக் கனிவிக்கும் இன்னிசை யெழுப்பி இங்கும் அங்கும் அவை பறந்தவண்ணமாக இருந்தன. மயிலின்நர்த்தனமும் குயிலின்தீங்குரலும் ஒரே சமயத்தில் கண்டு கேட்டு இன்புறுவதற்கமைந்த அச்சோலையின் ஓர்பால் ஆயிரக்கால் மண்டபம்போல் மிகப் பெரிய ஓர் ஆலமரம் கம்பீரமாக விளங்குகிறது. அதன் பச்சை இலைகள் மரகதங்களாற் செய்தவைபோல அப்பேரொளியினிடையே ஜ்வலிக்கின்றன. அவ் வாலமரத்தின் கீழே தூய வெண்மணற்பரப்பிலே, ஓர் பெரியவர்முன்னிலையில் நூற்றுக்கணக்கான இளைஞர்கள் கையில் ஓலைச்சுவடியுடன் வீற்றிருக்கின்றனர். பன்னிருவர் அருளிய நாலாயிரம், மூவர் மொழிந்த தேவாரம், வள்ளுவர் செய்த தெய்வத் திருக்குறள், கம்பன் பாடிய செஞ்சொற் காவியம் முதலியவற்றை நெஞ்சையுருக்கும் இன்னிசையோடு பயின்றுகொண்டிருந்தனர். அம்முதியவரைக் கண்டதும் அனைவரு மெழுந்துநின்று மரியாதை செய்தனர். "இதோ முருகன் என்னும் இவ்விளைஞனையும் நுமது மாணவருள் ஒருவனாகச் சேர்த்துக் கல்வியளியுங்கள்" என்று கூறி, அச்சிறுவனை அங்கிருந்தபெரியாரிடம் ஒப்புவித்து மீண்டார் முதியவர்.

(தொடரும்)

மதுரைக் கோவை

[331-வது பக்கத் தொடர்ச்சி]

XXIII. செவிலி கூற்று.

கழையோடு வெறுத்தல்

கண்பெற்ற நெற்றிக் கடவுளல் லாதொரு
காலமுநீ
பெண்பெற்ற பேறல்ல வேகழை யேவெண்
பிறையொடந்தி
விண்பெற்ற செஞ்சடை வெள்ளிமன் றுளர்
வியன்கிரியென்
பண்பெற்ற சொல்லி பதம்பெற்ற பேறொன்றும்
பார்த்திலையே. 294.

சுரவோடு வெறுத்தல்

வண்டோ லுறுத்த வுறங்கினை யோவென்
மயில்வரவு
கண்டோ கயிலுட் கரைந்தில வோமழைக்
கார்தவழ
விண்டோய் நெடுமதில் வெள்ளிமன் றுளர்பொன்
வெற்பிலெது
கொண்டோ தடுக்கிலை நீவெறும் பாவை
கொடுங்குரவே. 295.

சுவடு கண்டிரங்கல்.

அந்தச் சுவடண்ணல் விற்கோடி நாணிட்ட
தம்புபட்ட
தந்தக் கடாசலம் பட்டதிங் கேமுத்தி
தங்குமர
விந்தச் சரணத்தர் வெள்ளிமன் றுளர்தம்
மேருவெற்பி
லிந்தச் சுவடென் மடந்தைகண் மாரி
யிடைநின்றதே. 296

சுரத்தியல் கண்டு வருந்தல்

தீராக் கடுங்கனல் தன்னுரு மாறித்
திசையடங்கப்
பாராய்ப் பரந்தவெம் பாலையி லேவெம்
பராகமெழத்
தூராப் பகைதுரக் குஞ்சொக்கர் மால்வரைச்
சூதளக்க
வாராத் தடங்கண்ணி யோவடித் தாமரை
வைப்பதுவே. 297.

சேவிலி யுணர்ந்துடன் வருவாரை வினுதல்

உனைப்போ லொருதிரு வுந்திரு வேயுன்
னுயிரனையான்
றனைப்போ லொருவனும் வந்ததுண் டோசினைச்
சங்குளைந்து
மனைப்போத வீதி புகுமது ரேசர்
வரையிலிந்த
நினைப்போ ருளஞ்சுடும் வெவ்வழற் பாலை
நிலங்கடந்தே. 298.

சேவிலிதனக் கெதிர்வருவார் கூறல்

எதிராய் வருந்திரு வேயிது நேர
மினங்களப
முதிரா முலைவல்லி யுஞ்சிலைக் காளையு
மூரிமுன்னீர்
அதிரால காலமுண் பாரால வாய
ரரசிருக்கும்
மதுரா புரியிளம் பூங்கா டவிசென்று
வைகுவரே. 299.

முனிவரை வினுதல்

கவளக் கடகளிற் றூர்சொக்க நாதர்
கடம்பவனத்
தவளப் பொடியணி யுந்தவத் தீர்தன்
றனிமருங்குல்
துவளத் துவள யிருதன பாரஞ்
சுமந்துவரு
மவளைக் குரிசில்பின் கண்டதுண் டோவிவ்
வருஞ்சுரத்தே. 300.

வேதியரை வினுதல்.

மண்பா வியபுயத் தார்மது ரேசர்
வடித்தமறைப்
பண்பாடு நீதிப் பனுவல்வல் லீர்பெற்ற
பாவிநைய
விண்பாயும் வேலையு நீரழற் பாலையில்
மெல்லடிப்பூம்
பெண்பாவை வந்ததுண் டோசிலைக் காளையைப்
பின்பற்றியே. 301.

உலகியல்கூறி மறுத்தல்.

வடித்தாரை வேல்விழி யால்நறுங் காவி
மலரெடுத்து
முடித்தா ரதன்பயன் கொள்வதல் லால்மண்
முழுதுங்கொண்ட
கொடித்தாம நீள்புயத் தார்சொக்கர் கூடற்
சுனைகளும்பின்
பிடித்தார் தரிப்பதுண் டோமக வாசை
பெரும்பிழையே. 302.

சேவிலி கூற்று முற்றும்.

XXIV. மீட்சி

பின் சென்ற தலைவி வருந்தங்கண்டு தலைவன் மீட்சிகூறல்

தேடற் கரிய திருவேயுன் பூவையைத்
தேடிநெஞ்சில்
வாடற் கவலை யொறுமறு காலும்
வயப்புரவி
யாடற் கொடிநெடுந் தேரால வாய
ரரசிருக்குங்
கூடற் றடம்பொழில் சூடுங்க ணுடு
குறுகுவமே. 303.

மீண்ட தலைவிக்குத் தலைவன் வளநகர் காட்டல்.

பூம்பாளை யுஞ்செழுங் காவியம் போதும்
புனைதிருவே
மேம்பாடு பூணு மிளமரக் காவிது
மீனவற்கு
வாம்பாய் பரியிடு வார்மது ரேசர்
வரையிலிணைக்
காம்பாடு தோளணங் கேயது போய்நுங்
கடிநகரே. 304.

மீண்ட தலைவி தன் வரவை யாயத்தார்க் குரையுமென
அந்தணர்க் குரைத்தல்

செந்தே னலங்கற் றிருவால வாய்நகர்
சென்றரூேர்
தந்தே சுரைக்குஞ் சதுமறை யீர்தந்
தயாவடங்கப்
பைந்தே னலர்கொய்ய வுஞ்சுனை யாடல்
பயிலவுநான்
வந்தே னெனவுரை யீரென தாய
மடந்தையர்க்கே. 305.

தலைவி மீண்டமை கண்டோர் தோழிக் குரைத்தல்

செய்க்காவி நாறுந் திருவால வாயர்
சிலம்பில்வல்லி
யெக்கால மிந்த வுவகைபெற் றுய்கெட்
டிதழ்விரிந்த
மைக்காவி யங்கண்ணி யுஞ்சிங்கக் காளையும்
வந்துநகர்
புக்கா ரினியெய்து மோவொரு நாளிப்
புதுவிருந்தே. 306.

தோழி சுரத்தியல் வினுதல்

குழலாற் றருமின்சொற் கோமள மேயக்
கொடுஞ்சுரத்தின்
அழலாற்றி யேநடந் தாயரு கூர்வெள்ளி
யம்பலத்தே
சுழலாய்ப் பரிவுகொள் வார்சொக்கர் தாளைத்
தொழார்புரம்போ
னிழலாற் றிடையிலை யேயிளைப் பாறவு
நிற்கவுமே. 307.

தலைவி தோழிக்குச் சுரத்தியல் புரைத்தல்

மண்ணளிக் கும்புயத் தார்மது ரேசர்
வரையில்வண்டு
பண்ணளிக் குங்குழற் பாவைநல் லாய்கடற்
பாரிலொரு
விண்ணளிக் குந்தரு நீழலொப் பான
விடலைதருந்
தண்ணளிக் கெந்தத் தழற்சுர மாகிலுந்
தண்ணெனுமே.

மீட்சி முற்றும்
உடன்போக்கு முற்றும்.

வர்த்தமானம்

புத்தக வரவு:—சகோதரி வி. பாலாம்பாள் அம்மாள் எழுதிய மனோகரி என்னும் ஒரு தமிழ் நாவலும் (விலை ரூ. 1) வேங்களத்தூர் ஸ்ரீமான் சாமிநாத சர்மா தமிழில் எழுதிய அபிமன்யு என்னும் ஒரு நாடகமும் (விலை 8 அணு), பிரபாகர். R. கேய்க்கினி என்பவர் "Flower offerings' என்று ஆங்கிலத்தில் உரை நடைச் செய்யுள்களாக உண்மை அழகு முதலியவைகளைப்பற்றி எழுதிய ஒரு சிறு நூலும் எம்முடைய பார்வைக்கு அனுப்பப்பெற்றோம்.

* * *

குடி அறி கருவி:—ருஷ்யாவில் ஓர் புது யந்திரம் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இதனால் அமிதமான குடியர்கள் யாரென்று எளிதில் கண்டுபிடித்துவிடலாமாம். அந்த யந்திரம் ஒரு குழாய் போன்றது. அதில் நிறமற்ற ஒரு திராவக மிருக்கின்றது. மனிதரை 15 விநாடி நேரம் அந்தக் குழாயில் சுவாசிக்கச் செய்தால் அவர் குடியராயிருந்தால், அந்தத் திராவகம் மேக நிறமாக மாறிவிடுகின்றதாம்.

* * *

பாம்பைத் தின்ற பசு:-ஸ்பெயின் என்னும் இடத்தைச் சேர்ந்த ரிம்போர்டு என்னும் இடத்தில் ஒரு விவசாயி வளர்த்த பசுவானது, திடீரென இறந்துவிட்டது. இதன் காரணத்தை அறியப் பசுவின் வயிற்றை வெட்டிப் பார்த்தபோது அதன் வயிற்றில் 11 அங்குல நீளமுள்ள ஓர் பாம்பு இருக்கக்கண்டனர். பசு புல் தின்னும்பொழுது பாம்பையும் சேர்த்துவிழுங்கிவிட்டது. அது விஷப் பாம்பாகையால், பசு இறந்துவிட்டதென்று டாக்டர்கள் கூறுகின்றனர்.

* * *

கிழவியின் காதல்:—160 வயதில் சாரோ ஆகா என்னும் துருக்கியர் இறந்து விட்டதாகக் கேட்ட அம்வி என்னும் 120 வயதுள்ள ஸ்திரீ துக்கம் மேலிட்டவளாய்த் திடீரென இறந்துவிட்டாள். அவளை நூறு வருஷங்களுக்கு முன்பு சாரோ ஆகாவுக்குக் கலியாணம் செய்து கொடுப்பதாகப் பேசியிருந்ததாம். அப்பேச்சு முறிந்துவிட்டது என்றும் ஆயினும் சாரோ ஆகாவைப் பலகாலம் காதலித்துக் கடிதம் எழுதியதாகவும் அவர் பதில் எழுதவில்லையென்றும் இறக்கும்போது அவள் சொன்னதாக, கேட்டால் விட்னஸ் என்னும் பத்திரிகை அறிவிக்கின்றது.

* * *

உலகில் சிறிய குழந்தை:—பிரிட்டனைச் சேர்ந்த வால் தம்ஸ்டவ் என்னுமிடத்தில் ஒரு குழந்தை பிறந்திருக்கிறது. அதுதான் உலகின் மிகச் சிறிய குழந்தையாம். அதன் பெயர் அங்கிகலர் மார்டேன் என்பதாம். அதன் நிறை $1\frac{1}{2}$ பவுண்டுகளாம். குழந்தை பிறந்தவுடனே 1 பவுண்டும் $\frac{1}{2}$ அவுன்சுந்தான் இருந்ததாம். அக்குழந்தைக்குத் தினசரி மணிக்கொரு முறை பவுண்டன் பேனுவுக்கு இங்கி ஊற்றும் குழாய் மூலம் பிராந்தியும் பாலும் கொடுக்கப்பட்டு வந்ததாம். அதனால் அக்குழந்தை தினசரி ஒரு அவுன்ஸ்விகிதம் நிறையில் அதிகரித்துக்கொண்டே வருகிறதாம்.

* * *

காமதேனு:—சிக்கந்தராபாத் பண்ணையிலுள்ள சகுந்தலை யென்ற பசு நாள்தோறும் 25 பவுண்டு பால் கொடுக்கிறதாம். அது 319 நாளில் $8573\frac{1}{4}$ பவுண்டு பால் கொடுத்திருக்கிறதாம். இந்தியாவில் இது தான் மிக அதிகமான பால் கொடுத்திருக்கிறதாம்.

* * *

அரிய கிளி:—வாஷிங்டன் நகரில் ஒரு செல்வமுடைய மாதினிடம் ஒரு கிளி 50 வருஷகாலமாகவே வளர்ந்து வந்தது. அந்தக் கிளி ஆங்கிலம் ஜர்மன் பிரஞ்சு பாஷைகள் பேசக்கூடுமாம். அமெரிக்கா மாது தேக அசௌகரியமாக விருந்து இறக்க நேர்ந்தது. அம்மாதிற்குக் குழந்தைகள் கிடையாது. அவள் எழுதி வைத்திருந்த உயிலில் ஷை கிளிக்குக் குளோரோபாரம் கொடுத்து அதைத் தன்னுடைய கல்லறையிலேயே அடக்கம் செய்துவிடும்படி எழுதி யிருந்தாள். ஆனால் பிரேதசமஸ்கார கர்த்தாக்கள் இதை ஆக்ஷேபித்தனர். இதைப்பற்றி நியாயாதிபதியிடம் பிரியாதுசெய்துகொண்டதில் அந்த நீதிபதி சட்டப்படி ஷை கிளியைக் கல்லறையில் அடக்கம் செய்வது கட்டாயமில்லையானாலும், ஜீவகாருண்யத்தை உத்தேசித்து ஷை கிளியை அவருடைய கல்லறையிலேயே அடக்கம் செய்யவேண்டுமெனத் தீர்ப்புச்செய்தார்.

கம்பராமாயணம்:—பதவுரை விளக்கம் இலக்கணக் குறிப்பு, முதலியவைகளுடன் ஸ்ரீ. வை. மு. சடகோப ராமாநுஜாசாரியார், சே. கிருஷ்ணமாசாரியார், வை. மு. கோபாலகிருஷ்ணமாசாரியாரவர்களால் பதிப்பிக்கப் பெற்றவை. பால காண்டம் ரூ. 5. அயோத்தியா காண்டம் ரூ. 5. ஆரணிய காண்டம் ரூ. 4. கிஷ்கிந்தா காண்டம் ரூ. 4-8-0. சுந்தர காண்டம் ரூ. 5. யுத்த காண்டம் 2-பாகம் ரூ. 10. தபால் செலவு வேறு.
கலா நிலயம் ஆபீஸ், புரசைபாக்கம், சென்னை.

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட்ஸ் நஞ்சன்கூடு "சத்வைத்யசாலை" மருந்துகள்
"ஆல்மண்டைன்" (டானிக்). "பாலக்ஸ்" பேதிமாத்திரை. "ஸ்ப்ளிவரால்" (குழந்தை கட்டிக்கு)
சுமார் 300 போலிகள் ஏமாற்றும்.
ம.ட.ச்யாவனப்ராசா ம.ட.பிருங்காமலக தைலம் கோரோஜனை மாத்திரை
நஞ்சன்கூடு பல்பொடி
சாதாரணம்-பாக்கெட் (ரிஜிஸ்தர் செய்துள்ளது) ம.ட.டீ. மெடிகேடட்-டப்பி
தயவுசெய்து கவனித்து வாங்கவும்.
ம.ட. ச்யாவனப்ராச சிறந்த டானிக் சத்வைத்யசாலை - நஞ்சன்கூடு
மூலிகைசேர்ந்தசிற்றுணைக்கு எண்ணெய் காஸ்ட்ராலகஸ்
ஜவரேக் சகல எவ்வித ஜுரங்களுக்கும்
[பஸ்மங்கள் வைத்தியர்களுக்கு மட்டும்] [அட்வான்ஸுடன் ஆர்டர் செய்யவும்.]

M211, N28 K N
N34?.22
199172

KALANILAYAM
REG. NO. M. 2324.

எல்லாவிதமான இன்ஷூரன்ஸ்களுக்கும்

ஜுபிட்டர் ஜெனரல்
இன்ஷூரன்ஸ் கம்பெனி
லிமிடெட்

யோசனை கேளுங்கள்.

நெருப்பு, கப்பல், மோட்டார், தபால், ரயில்வே இவைகளுக்கும் மரணத்திறகும் இன்ஷியூரன்ஸ் எடுத்துக்கொள்ளுகிறோம்.

சென்னையிலேயே பாலிஸிகள் கொடுக்கப்பட்டுப் பணங்களும் பட்டுவாடா செய்யப்படும்.

1919-ம் வருஷம் ஸ்தாபிக்கப்பட்டுச் சென்னையில் 1920-ம் வருஷம் முதல் வேலைசெய்து வருகிறது. பெரிய பாங்கிகளாலும் வியாபார ஸ்தாபனங்களாலும் மதிக்கப்பட்டது.

பூராவும் நம்பகமானது

(பெரிய முதலும் நிதியும் உடையது)

நேரிலாவது அல்லது நெ. 2547-க்கு போனிலாவது பேசவும்.

நாராயணதாஸ் கிர்தார்தாஸ்

(ஸ்தல மானேஜர்கள்)

நெ. 99, அரமனைக்காரன் தெரு,
சென்னை.

NATIONAL
INSURANCE COMPANY, LIMITED.
Head Office :
NATIONAL INSURANCE BUILDING,
362, China Bazar Rd, Esplanade, Madras.

1933 Results.

New Business Completed exceeds ... ... Rs. 1,67,00,000

The Company with a steady progress all round.

All forms of life assurance policies issued at low safe rates of premium.

Specialities.

Female Lives
Joint Lives
Permanent Protection Policies
Triple Benefit Policies.
Marriage & Future Provision Policies.

For agencies please apply to:—

Branch Secretary,
362, China Bazar Road,
Esplanade, Madras.
OR
R. G. DAS & Co.,
Managers.

Consult
NATIONAL FIRE
AND
GENERAL INSURANCE COMPANY Ltd.,

Head Office:—
NATIONAL INSURANCE BUILDING,
362, China Bazar Rd, Esplanade, Madras.
for Fire, Motor & Accident policies.

A sound Company.

Please apply for particulars to:—

Branch Secretary,
362, China Bazar Road,
Esplanade, Madras.
OR
R. G. DAS & Co.,
Managers.

யுனைடெட் இந்தியா
லைப் அஷ்யுரன்ஸ் கம்பெனி, லிமிடெட், சென்னை.

ஹெட் ஆபீஸ்:—சென்னை. 1906ளு ஸ்தாபித்தது.

யுனைடெட் இந்தியாவில், லைப் இன்ஷூயரன்ஸின் சிறந்த பயன்கள் குறைந்தசெலவில் கிடைக்கும்.
யுனைடெட் இந்தியாவில் பாலிஸி எடுத்துக்கொள்வது மிகச்சிறந்த இன்வெஸ்ட்மெண்டும், வயது காலத்திற்கும் குடும்பத்திற்கும் இணையற்ற ஆதரவும் ஆகும்.
யுனைடெட் இந்தியாவே, தென்னிந்தியாவில் மற்றெல்லாக் கம்பெனிகளுக்கும் முன்னால் ஸ்தாபித்தது.
யுனைடெட் இந்தியா முற்றிலும் பத்திரமானதும் கெட்டிதிட்ட முடையதும் ஆன கம்பனி.

ஹெட் ஆபீஸ்:—
செம்புதாஸ் தெரு,
சென்னை.
அல்லது
இந்தியா, பர்மா,
ஸிலோனில்
உள்ள பிராஞ்சுகள்

இவைகளுக்கு எழுதி முழு விவரமும் இது பற்றிய பிரசுரங்களும் பெற்றுக்கொள்ளலாம்.

உயர்ந்த ஜாதி
பழமரக் கன்றுகள்

முறைப்படி வளர்க்கப்படுவன

பழமரங்கள் வைத்து வளர்ப்பதால் இலாபம்.

அவை உயர்ந்த ஜாதியாயிருக்கவேண்டும். ஜாதியின் சிறப்பு அவைகளை வளர்க்கும் முறைக்குத் தக்கபடி அமையும். உங்களுக்கு வேண்டிய பழச் செடிகளை தக்க இடத்தில் வாங்கத் தயங்காதீர்கள்.

விலையும் நயம்!

ஜாதியில் உயர்ந்தது! ஒருபோதும் கெடாதது!!

தென்னிந்தியா முழுவதும் பேரெடுத்தது
தேசாயின் பழச்செடி தினுசுகளே.

உங்கள் தோட்டம் தோப்புக்களுக்கு வேண்டியவைகளை வாங்குவதற்கு முன்பு தேசாயைக் கேட்டுத் தெரிந்து வாங்குவதே நன்மையும் இலாபமும் ஆகும் என்பதைத் தீர்மானமாய் வைத்துக்கொள்ளுங்கள்.

நேரிலாயினும் கடித மூலமாயினும் எது கேட்டாலும் தெரிவிக்கத் தயாராயிருக்கிறார். தேவகோட்டை ராம்நகர் எக்ஸ்டென்ஷனில் பழத் தோட்டங்களும் அலங்கார நந்தவனங்களும் அமைத்துத்தரவும் மேற்பார்வை செய்யவும் ஏற்றுக்கொள்வார்.

D. T. தேசாய்—பழமரம் பூஞ்செடி எக்ஸ்பர்ட்.
தேசாய் அண்டு கோ.,
17, க்ராஸ் ரோட் :: மல்லேச்வரம், பங்களூர்.

DESAI & Co.,
17, Cross Road
Malleswaram
BANGALORE

இந்தியா தேசத்து இணையற்ற இரத்தினம்

ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்

தேக பலத்தையும், இரத்த விருத்தியையும், ஞாபக சக்தியையும், தாது புஷ்டியையும் கொடுப்பதில் நிகரற்ற ஔஷதம். சென்ற 53வருஷங்களாக இலட்சக்கணக்கான ஜனங்களால் உபயோகிக்கப்பட்டு வருகின்றன.

32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு விலை ரூ. 1

இனும்! இனும்!!

"இன்பவாழ்க்கையாலடைந்த சக்தி"

இனமாகவும் தபாற்செலவில்லாமலும் அனுப்பப்படும்.

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26 பிராட்வே, மதராஸ்.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)